பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 22 | வியாழக்கிழமை (07.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 231

## மட்டக்களப்பில் பெரும் பரபரப்பு

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல்

## பிக்கப் வாகனம் முற்றாகச் சேதம்

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீது நேற்று இரவு 8.15 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

**இத் தாக்குதலினால் அலுவலகக் கட்டடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரித்தானிய மிதிவெடி செயற்பாட்டுக் குழுவுக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது.**

சமதான சூழலில் இந் நிறுவனம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் படையினரின் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இவ்வலுவலகம் அமைந்துள்ளது.

கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.ரி.றெஜி மற்றும் கழக முக்கியஸ்தர்கள் மட்டக்களப்பில் தங்கிநிற்கின்ற வேளையில் இக் கைக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரினால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

இரவு நேர ஊழியர்கள் மாத்திரம் அலுவலகக் கடமையில் இருந்தமையினால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனினும், அலுவலகக் கட்டடத்துடன் இணைந்த வகையில் இயங்கி வரும் பிரித்தானிய மிதி வெடிச் செயற்பாட்டு குழுவின் அலுவலகம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந் நிறுவனத்தின் பிக்கப் வாகனம் மீது கைக்குண்டு வீழ்ந்து வெடித்ததினால் அவ் வானம் முற்றாகச்

(10ம் பக்கம் பார்க்க)

## பாப்பரசர் ஆசீர்வதித்த சொரூபம் மடுவுக்கு பவனியாக வருகிறது

(வவுனியா)

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரினால் ஆசீர்வதிக்கப்பட்ட மடுமாதா சொரூபம் நாளை மறுதினம் கொழும்பில் இருந்து ஊர்வலமாக மடுவுக்கு எடுத்து வரப்படவுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அண்மையில் இத்தாலிக்குச் சென்று பாப்பரசரைத் தரிசித்திருந்தார் அப்போது இலங்கை யின் சமாதான முயற்சிகள் உத் வேகமடைய வேண்டி பாப்பரசரினால் ஆசீர்வதிக்கப்பட்ட மடு மாதா சொரூபம் ஒன்று அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி சொரூபமே நாளை மறுதினம் சனிக்கிழமை கொழும்பில் இருந்து பவனியாக எடுத்து வரப்படவுள்ளது. எதிர்வரும் 13ஆம் திகதி வவுனியா ரம்பைக்குளத்தை பவனி வந்தடையும். அன்றைய தினம் ரம்பைக் குளத்தில் உள்ள அந்தோனியார் ஆலயத்தில் சொரூபம் வணக்கத்திற்காக வைக்கப்படும் பின்னர் மடுத்திருப்பதிக்கு எடுத்து செல்லப்படும். (த-13)

## உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக் குடியமரதிட்டவரைபு

### புலிகள் தயாரிப்பதாக ஆங்கிலப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக திட்டவரைபுக்கான பதிலை விடுதலைப் புலிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடுவரென்று புலிகளின் பேச்சாளரொருவர் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடொன்றில் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக திட்டவரைபு யோசனைகளைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமார் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்து வருவதாகவும் அதியுயர் பாதுகாப்பு வலையத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான திட்டவரைபு உருவாக்கப்பட்டு வருவதாகவும் புலிகளின் பிரஸ்தாப பேச்சாளர் கூறினாரென்று அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை அரசாங்கத்தின் இடைக்கால திட்டவரைபு குறித்து விடுதலைப் புலிகள் இதுவரை உத்தியோக பூர்வமாக கருதது எதனையும் வெளியிடவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## எதிர்க் கட்சி கூச்சல் குழப்பம் பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டதால் 15 நிமிடங்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

நேற்று காலை 10 மணியளவில் சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தலைமையில் பாராளுமன்றம் கூடியபோது.

பிரித்தானிய அரசின் புதிய விஸா நடைமுறை குறித்து விவாதிக்க சபாநாயகர் அனுமதி தரவேண்டும் என எதிர் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவ் விடயம் சம்பந்தமாக உயர் நீதி மன்றத்தில் எதிர் கட்சித் தலைவர் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இது குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்க முடியாது என சபாநாயகர் தெரிவித்தார்.

இதன் போது எதிாக் கட்சி தலைவர் தாக்கல் செய்த வழக்கு வெறுமனே பதியப்பட்ட வழக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில் வேப்பமரம் தறிப்பதற்காக சென்ற வேளை மிதிவெடி வெடித்ததில், இருவர் காலில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மு.ப.10 மணியளவில் மட்டுவில் வடக்கு சரசாலைப் பகுதியில் இடம்பெற்ற இவ் அனர்த்தத்தில் மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியை

(10ம் பக்கம் பார்க்க)

## குரங்குபாஞ்சான் முகாம் சர்ச்சை

# புலிகளின் முடிவுக்கு கண்காணிப்புக்குழு விதித்த காலக்கெடு முடிவடைந்தது!

(கொழும்பு)

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் திருகோணமலை குரங்குபாஞ்சானில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் தொடர்பாக புலிகள் தமது இறுதி முடிவைத் தெரிவிக்க போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

குரங்குபாஞ்சானில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டதாகப் படைத்தரப்பினர் குற்றம் சாட்டி, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

ஆனால் அது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு பல வருடங்களுக்கு முன்னர் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் பெரும் இழுபறிக்கும் சர்ச்சைக்கும் உள்ளாகியிருக்கும் இம் முகாமை விடுதலைப் புலிகள் அகற்ற வேண்டும் என கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளதுடன், அற்கான முடிவைத் தெரிவிக்குமாறும் நேற்று வரை புலிகளுக்கு காலக்கெடு விதித்திருந்தனர்.

இதேவேளை குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக அதனை அகற்றுவதா இல்லையா என்பது குறித்து விடுதலைப்புலிகள் இதுவரை உத்தியோக பூர்வமாக தமது முடிவை வெளியிடவில்லை.

(10ம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறாத பாடசாலைகள் இரண்டாந் தவணை விடுமுறைக்காக இன்றுடன் மூடப்படுகின்றன.

உயர்தரப் பரீட்சை நடைபெற்ற பாடசாலைகள் எதிர்வரும் 15ந் திகதி மூடப்படும்.

இதேவேளை எதிர்வரும் 25ந் திகதி மூன்றாந் தவணைக்காகப் பாடசாலைகள் அனைத்தும் திறக்கப்படும். (த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழீழ அரும்பொருள் பாதுகாப்பு நடுவகம் தேசியத் தலைவரின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு

## அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

எங்களுடைய வரலாற்றை, வரலாற்று ஆவணங்களை, வரலாற்றுப் பதிவுகளை சமகால வரலாற்றைப் பேணிப்பாதுகாக்கின்ற தேசிய அளவிலான அமைப்பு ரீதியிலான ஒழுங்கு படுத்தலை மாவட்டங்கள் தோறும் செய்ய வேண்டும் என்ற எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பினை செயற்படுத்தும் வகையிலேயே தமிழீழ அரும் பொருள் பாதுகாப்பு நடுவகம் அமைகின்றது.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ அரும் பொருள் பாதுகாப்பு நடுவக அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

தறபோது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி இத்தகையதோர் அமைப்பினை நிறுவி எமது செயற்பாடுகளை தீவிரமாக்கவுள்ளோம்.

கடந்த சில நாட்களாக நான் தென் தமிழீழத்தில் நின்ற போது பல வரலாற்றுச் சான்றுகளை காண முடிந்தது. ஆனால் அந்த வரலாற்றுச் சான்றுகளைப் பேணக் கூடிய சூழ்நிலை அங்கு இல்லை.எனவே எமது வரலாற்றுச் சான்றுகளை பேணும் மன நிலையை எல்லாத் தமிழர்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும்.

எங்களை ஆக்கிரமித்து நிற்பவர்கள் தமது வரலாற்றுச் சான்றுகளைப் பேணுவதில் எவ்வளவு அக்கறையாகவுள்ளனர் என்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் திருகோணமலையில் உள்ள தமிழ்க் கிராமம் ஒன்றில் வசித்து வந்த எமது தமிழ் மக்கள் சிங்கள மக்களால் விரட்டப்பட்டு அங்கிருந்த இந்து ஆலயத்திற்கு அருகில் பௌத்த ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் எமது போராளிகளால் அப்பகுதி மீண்டும் மீட்கப்பட்டு தற்போது தமிழ் மக்கள் அங்கு குடியேறி வருகின்றனர்.

எனவே, எமது பிரதேசங்களை மீட்டுச் செல்லும் வேளையில் நாங்கள் எங்கள் வரலாற்றை ஆவணப் படுத்தி கொள்வதும்" பேணிக் கொள்வதும் உயரிய பணியாகும்.

நாம் போராட்டத்தில் எவ்வளவு அர்ப்பணிப்புடனும் தீவிரமாகவும் செயற்பாடுகளை வகுத்துக் கொண்டு செல்கின்றோமோ அதேபோன்று உரமான உழைப்பினூடே வரலாற்று ஆவணங்களையும் சான்றுகளையும் பேணுவதில் நாம் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும் இதுவே எமது தலைவரின் நீண்டகால எதிர்பார்ப்பும் ஆகும் என்றார்.(உ-10)

# பசப்பு வார்த்தைகளைக் கூறி இங்கு வருகின்ற தென்னிலங்கையரை இனியும் நம்புவதற்கில்லை

## குடாநாட்டு பொது அமைப்புக்கள் ஒருமித்து குரல்

(யாழ்ப்பாணம்)

எமது உணர்வுகளையும் தேவைகளையும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வினூடாக பிரதிபலித்துள்ள இவ் வேளையில் எமது உணர்வுகளை அறிந்து சென்று தென்னிலங்கை மக்களுக்கு பிரதிபலிப்பதாகக் கூறும் பொய் வேடதாரிகளை நாம் நம்புவதற்கில்லை.இவ்வாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒருமித்து குரல் எழுப்பியுள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் இடம் பெற்ற 'இலங்கையின் நிரந்தர சமாதானத்திற்கான [illegible] வர் எஸ்.பரமநாதன், நீதிக்கும் சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவர் வண.பிதா பேனாட் அடிகளார், சி.வி.கே.சிவஞானம், பொது அமைப்புக்களின் தலைவர் சிறில், தமிழீழ மாணவர்பேரவை பிரதிநிதிகள் உட்பட பல பேராசிரியர்கள் வைத்தியர்கள் மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இது சம்பந்தமாக பிரதிநிதிகள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் மக்கள் தமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி தமது ஏகப்பிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கி அதனூடாக இயல்பு வாழ்க்கை, சுயநிர்ணய [illegible]

மாணவர்கள் [illegible] நிலையில் [illegible] யாழ்ப்பாணம் அல்லது வடகிழக்கு தமிழ் மக்களது உள்ளத்தின் உணர்வுகள் பற்றி [illegible] பலனும் கிடையாது.

சமாதானம் என்ற போர்வையில் தமது [illegible] இழந்து [illegible] மட்ட [illegible] பாதிக்கப்படும் மாணவர்கள் ஆசிரியர்கள் [illegible] நேரடி ஆதாரங்கள் [illegible] வெளியுலகத்திற்குத் தெரிய [illegible] என்பதற்காகவே [illegible] யாதும் 27ம் திகதி [illegible] அனைத்து சமூகமும் ஒன்று திரண்டு பொங்கு தமிழை நடத்தின. இதைவிட எமது மக்களின் உணர்வுகளை வெளிப் [illegible]

[illegible] தர்க்கங்களை அரசு முன்வைத்து தமது கருத்தை நியாயப்படுத்தினாலும் உண்மையிலே சட்ட ரீதியில் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் இயல்பு வாழ்வு போன்ற விடயங்களை அரசு இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை.

அதேவேளை தமிழரின் வாழ்வுரிமையை தட்டிப் பறிக்கும் சிங்கள இனவாத அரசியல் கட்சிகளின் செயற்பாட்டைத் தட்டிக் கேட்காத அமைப்புக்கள் தமிழர்களுக்கு சமாதானத்தின் தேவை பற்றி போதிப்பது அவசியமற்றது.

உண்மையான பிரச்சினைகளை உணராது வெறுமனே சமாதான யாத்திரைகள் செய்யப்படும் குழுக்களின் செயற்பாட்டை எழுது தமி

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'தமிழீழத்தின் கடல் வழங்களும் மீனவர் எதிர் நோக்கும் சாவால்களும்' என்ற தலைப்பில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் இடம் பெறும் இக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன் கருத்துரை வழங்கவுள்ளார். (த)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லை நாவ

[illegible] மற்றும் பொது அமைப்புக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் ஒருமித்து குரல் எழுப்பியுள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்.பல் கலைக்கழக புவியியற் துறை மண் டபத்தில் இடம் பெற்ற 'இலங்கை யின் நிரந்தர சமாதானத்திற்கான தரிசன நோக்கு' என்னும் தலைப் பிலான செயலமர்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த கலாநிதி தேவநேசன் நேசைய தலை மையிலான குழுவிற்கே மேற்கண் டவாறு சுட்டிக் காட்டியுள்ளனர்.

மனித நேய அமைப்பின் தலை [illegible]

இது சம்பந்தமாக பிரதிநிதி கள் மேலும் கருத்துத் தெரிவிக்கை யில் தமிழ் மக்கள் தமது பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி தமது ஏகப்பிரதிநிதிகளாகிய விடு தலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கி அதனூடாக இயல்பு வாழ்க்கை, சுயநிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், என் பனவற்றை ஆளும் உரிமையை அரசு அங்கீகரிப்பதே பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வினூடாக சர்வ தேசத்தின் காதுகளில் இதனைப் பறைசாற்றியுள்ளனர்.

இந்நிலையில் படித்த கல்வி [illegible] [illegible] தொடர் [illegible] என் [illegible] 27 [illegible] சமூகமும் ஒன்று [illegible] நடத்தன. இதைவிட எமது மக் களின் [illegible] வெளிப் படுத்தவோ அன்றி உள்ளக் குமுறல்களை வடிக்கவோ வேறு எந்தவித யாத்திரைகளும் தேவை யில்லை.

மேலும் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்வதற்கு முட்டுக் கட்டையாக உள்ளது. இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை இதில் சட்டச் சிக்கல்கள் உண்டென பல [illegible] கள இனவாத அரசியல் கட்சிகளின் செயற்பாட்டைத் தட்டிக் கேட்காத அமைப்புக்கள் தமிழர்களுக்கு சமா தானத்தின் தேவை பற்றி போதிப்பது அவசியமற்றது.

உண்மையான பிரச்சினைகளை உணராது வெறுமனே சமாதான யாத்திரைகள் செய்யப்படும் குழுக் களின் செயற்பாட்டை எமது தமி ழினம் என்றும் ஏற்காது. இத்தகைய போதனைகள் தென்பகுதியில் இருந்து சமாதான முன்னெடுப்பு களுக்கு ஆப்பு வைக்கும் சிங்கள இனவாதக் கட்சிகளுக்கே தேவை எனவும் .காரசாரமான முறையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-4)

# களுத்துறைக் கைதியின் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்ட த்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று 6 ஆவது நாளாகவும் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

கடந்த 7 ஆண்டுகளாத் தடு த்து வைக்கப்பட்டுள்ள இவர் தனது வழக்கை விசாரணைக்கு எடுத்து கொள்ள வேண்டும் அல்லது தன்னை விடுவிக்க வேண்டும் எனக் கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் சிறைச்சாலை கூரைமேல் ஏறி உண்ணாவிரதப் போராட் டத்தை மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை இவர் தொடர் பான வழக்கு விசாரணை நீதி மன்றத்தில் நடைபெற்று வருவ தாக சிறைச்சாலை ஆணையாளர் புறூம் மர் ஆதி தெரிவித்துள்ளார்.

இக்கைதி தொடர்பாக சட்டமா அதிபர், மேல்நீதிமன்ற நீதிபதி ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்த நடவடிக்கை எடுத்துள்ள தாக அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

(தி)

# இந்திய மீனவர்கள் சார்பில் யாழ்.சட்டத்தரணி ஆஜர்

## விசாரணை செப்ரெம்பருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தார்கள் என்ற குற்ற சாட்டின பேரில் கடந்த மார்ச் மாதம் 4 ஆந் திகதி மாதகல் கோவுள முனையில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப் பட்ட தமிழ்நாடு நாகபட்டினத்தைச் சேர்ந்த 4 இந்திய மீனவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்றைய தினம் யாழ் மேல் நீதி மன்றத்தில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பீ.எஸ்.வரதராஜா முன் னிலையில் இடம்பெற்றது.

இலங்கைக் கடற்படையின் சிப்பாயான திஸநாயக்க இதன் போது சாட்சியமளித்தார்.இவரை அரச சட்டத்தரணியான செல்வி சுகந்தி கந்தசுவாமி குறுக்கு விசாரணை செய்தார்.

இதேசமயம் இந்திய மீனவர் களான நாகபட்டினத்தைச்சேர்ந்த இராசபானு, மாணிக்கம் சுந்தர் அஞ்சப்பன் சந்திரன், காந்தவராஜா சிவானந்தம் ஆகியோர் சார்பில் யாழ் சட்டத்தரணி கனகரத்தினம் கேசவன் ஆஜராகியிருந்தார்.

இவ்வழக்கு விசாரணையை நீதிபதி கே.பி.எஸ் வரதராஜா செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் யாழ் சிறைச் சாலை யில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்

(உ-16)

# விசா அனுமதி தொடர்பில் விவாதம் நடத்த முடியாது

(கொழும்பு)

பிரிட்டனுக்கான விசா அனு மதியின் போது விண்ணப்பதாரர்க ளின் கைவிரல் அடையாளத்தை பதிவு செய்ய வேண்டும் என்ற பிரிட்டிஸ் தூதரகத்தின் தீர்மா னத்தை இரத்துச் செய்யக் கோரி உயர் நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னனி யின் பாராளுமன்ற உறுப்பினர் மங் கள சமரவீர மற்றும் அவரது ஒருங்கிணைப்புச் செயலாளர் ஆகியோர் இணைந்து தாக்கல் செய்துள்ள இம்மனுவில் வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர் னான்டோ மற்றும் அமைச்சர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள் ளனர்.

பிரிட்டிஷ் தூதரகத்தின் இவ் அறிவிப்பு இலங்கை அரசியல் யாப்புக்கு முரணானது என்பதால் இதனை இரத்து செய்ய வேண்டும் எனவும்,தூதரகத்தின் இவ் அறி விப்பை அங்கீகரிப்பதற்கு அமைச் சரவைக்கு அதிகாரம் இல்லை எனவும் இம்மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கிடையில் பிரிட்டனுக்கான விசா அனுமதிப்பத்திரம் தொடர் பாக நீதி மன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் அது தொடர்பாக பாராளுமன்றத் தில் விவாதம் நடத்த முடியாது என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

(தி)

# மூவின மீனவர்களும் இணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட மீனவர் அபிவிருத்திமைய ஏற்பாட் டில் மாவட்டத்தின் மூவின மீனவர் களும் இணைந்து நேற்று ஆர்ப் பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள் ளனர்.

சட்டவிரோத முறையில் சுரு க்கு வலை, டைனமைற் போன்ற வெடி பொருள்களைப் பயன்படு த்தி மீன்பிடிப்பதற்கு எதிராகவே இவ் ஆர்பாட்டப் பேரணி நடத்த ப்பட்டது.

ஏகாம்பரம் வீதியில் ஆரம் பமான இவ் ஆர்ப்பாட்டப் பேரணி மணிக்கூட்டு கோபுரம் வரை சென்றது. இவ் பேரணியை திரு மலை யுத்த நிறுத்த கண்காணி ப்புக் குழு அலுவலகம் வரை நடத்த திட்டமிட்ட போதிலும் பொலிஸாரின் அனுமதி கிடைக்கப் பெறாததால் மணிக்கூட்டு கோபு ரத்துடன் நிறுத்தப்பட்டது.

எனினும் யுத்த நிறுத்த கண் காணிப்புக் குழு அலுவலகத்தில் பொலிஸ் மற்றும் முப்படை அதிகாரிகளுக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

(தி)

[illegible] கருத்துரை வழங்கவுள்ளார். (த)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல் கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் பிரதி வெள் ளிக்கிழமை தோறும் நல்லை நாவ லர் மணிமண்டபத்தில் நடத்தி வரும் ஆன்மீகத் தொடர் நிகழ்வு கள் வரிசையில் இம் முறை 'அன்புக் கோர் கண்ணப்பர்' என்ற விடயம் பற்றி உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலய அதிபர் ஆனந்தராசா (அன்னைதாஸன்) சொற்பொழிவாற் றவுள்ளார்.

(உ)

## விளையாட்டுப் போட்டி

(சில்லாலை)

சில்லாலை வடக்கு சாந்தை விநாயகர் முன்பள்ளி மாணவர்க ளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விந்தின ராக நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்துகொள்ளவு ள்ளார்.

(உ-58)

## கூட்டம்

(சில்லாலை)

ஜி.ரி.சற் நிறுவனத்தின் சமூக மேம்பாட்டு பிரிவின் கீழ் கிராமங் களில் பணியாற்றும் சமூக மேம் பாட்டாளர்கள், மேம்பாட்டுத தொண்டர்களுக்கான மாதாந்தக் கூட்டம் இன்று மு.ப 9மணிக்கு சுண்டுக்குளிச் சந்திக்கு அண்மையி லுள்ள ஜி.ரி.சற் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-58)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை யினரால் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள் ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களான க.ரவிகாந், தே.ரமணி,சி.சர்மிலா, செ.ஜெய கௌரி ஆகியோரின் பேச்சு மற்றும், பண்ணிசை நிகழ்வுகளும தொடர்ந்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர் செ.சுரேஸ் கரனின் பேச்சும் இடம் பெறவுள் ளது.

(உ-10)

## ஹிரோஷிமா நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு

# அணுகுண்டு அழிவுகளை வந்து பார்க்க உலகத் தலைவர்களுக்கு அழைப்பு

(டோக்கியோ)

ஜப்பானின் ஹிரோஷிமாவில் இடம்பெற்ற உலகின் முதலாவது அணுகுண்டுத் தாக்குதலின் 58 வது ஆண்டு நினைவு தினத்தை ஜப்பான் நேற்று அனுஷ்டித்தது.

அணுகுண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 லட்சத்து 30 ஆயிரம் பொதுமக்களை நினைவு கூருவதற்காக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஹிரோஷிமாவின் சமாதானப் பு,ங்காவில் நேற்றுக் கூடியிருந்தனர்.

இவர்களில் அணு குண்டுத் தாக்குதலின் போது நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும் அடங்கியிருந்தனர்.

**வடகொரிய அதிபருக்கு அழைப்பு**

உலகில் இடம்பெற்றுவரும் அணுவாயுத உற்பத்தியை கண்டித்தும், வடகொரிய அதிபர் கிம் ஜொங் - இல்லை ஹிரோஷிமாவின் அழிவுகளை வந்து பார்க்குமாறு வேண்டுகோள் விடுத்தும் இந்த நிகழ்வு இம்முறை அனுஷ்டிக்கப்பட்டது.

1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்ட நேரமான 8.15 மணிக்கு சமாதான மணி ஒலிக்க அனைவரும் எழுந்து நின்று சிரம் தாழ்த்தி இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஜப்பான் மீதான 2வது அணுகுண்டை நாகஷாக்கி மீது ஆகஸ்ட் 9ஆம் திகதி அமெரிக்கா வீசி 6 தினங்களில் ஜப்பான் அமெரிக்காவிடம் சரணடைந்தது.

**அமெரிக்காவே காரணம்**

இத்தாக்குதல்களை நினைவு கூர்ந்து இந்நிகழ்வில் உரையாற்றிய ஹிரோஷிமாவின் மேயர் ரராற்றோஷி அக்கிபா உலகில் அணுவாயுத உற்பத்தியின் வளர்ச்சிக்கு அமெரிக்காவே காரணம் எனக் குற்றம் சாட்டியதோடு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷையும் அணுவாயுத உற்பத்திகளில் ஈடுபடும் தலைவர்களையும் ஹிரோஷிமாவிற்கு வந்து அணுவாயுதங்கள் எத்தகைய அழிவுகளை ஏற்படுத்தும் என்பதை நேரடியாக பார்க்குமாறும் அழைப்பு விடுத்தார்.

ஈராக் மீதான அமெரிக்க பிரித்தானிய கூட்டுத் தாக்குதல் பற்றிக் குறிப்பிட்ட அவர், இதன்மூலம் போர்தான் இன்றைய சமாதானம் என்று நிறுவப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஹிரோஷிமாவின் அழிவு நினைவுகள் மெல்ல மறைந்து வரும் நிலையில் ஜப்பானும் தன்னை இராணுவ ரீதியில் வளர்த்து வருவது குறித்து இன்று சராசரியாக 71 வயதாகியுள்ள ஹிரோஷிமா தாக்குதலில் தப்பிப் பிழைத்தவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

உலக சமாதானத்தில் இருந்து வெகு தூரம் விலகிச் சென்றுள்ளது என்று ஹிரோஷிமா தாக்குதலின் போது 20 வயதாக இருந்து தாக்குதலில் உயிர் தப்பிய ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார். (பி-2)

## அப்பாஸ் – ஷெரோன் முறுகல் சிக்கலைத் தீர்க்க யு.எஸ் முயற்சி

(வாஷிங்டன்)

ஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனுடனான பேச்சுக்களைப் பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் இரத்துச் செய்ததால் எழுந்த சிக்கல்களைச் சமாளிப்பதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கைதிகளை விடுவிக்கும் விவகாரத்தில் ஏற்பட்ட திருப்திஇன்மையாலேயே பேச்சுக்களைத் தவிர்ப்பதாக பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பினால் அமெரிக்க ஆதரவினால் மேற்கொள்ளப்படுகின்ற 'வீதி வரைபட' சமாதான முயற்சிக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தவிர்ப்பதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை, அல்கெய்டா அமைப்பு பலஸ்தீனத்தில் புதிய உறுப்பினர்களைத் தம்முடன் இணைத்து இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேல் புதிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. (பி-2)

## இலத்திரனியல் பொருட்களை பயன்படுத்தி அல்கெய்டா தாக்குதல் நடத்தலாம்

### அமெரிக்க அதிகாரிகள் அபாய எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இலத்திரனியல் உபகரணங்களுக்குள் வெடிகுண்டுகளை மறைத்துத் தாக்குதல் நடத்தும் ஆபத்துக்கள் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் விமான நிலையங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

2001 செப்ரெம்பர் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல் போன்றதொரு தாக்குதலை ஒஸாமா பின் லேடனின் அல்கெய்டா அமைப்பினர் மீண்டும் மேற்கொள்ளலாம் என்ற எச்சரிக்கை அண்மையில் வெளியாகியிருந்ததையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கியூபாவின் குவாட்ரனோமா கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் துன்புறுத்தப்பட்டால் அதற்கான விலையினை அமெரிக்கா செலுத்த வேண்டியிருக்கும் என்று அண்மையில் அல்கெய்டாவின் தலைவர்களில் ஒருவரான அல் சவாரி வெளியிட்டிருந்த ஒலிநாடா இந்த அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இதனிடையே இந்தோனேஷியாவின் தலைநகரில் 14 பேரை பலிகொண்ட உல்லாச விடுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் அல்சவாரியின் எச்சரிக்கையுடன் தொடர்புடையதா என்ற சந்தேகம் தற்போது வலுவடைந்துள்ளது.

இந்நிலையிலேயே இலத்திரனியல் உபகரணங்களில் வெடிகுண்டுகளை மறைத்து புதிய தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற எச்சரிக்கையை அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை விடுத்திருக்கின்றது.

ஒளிப்படக் கருவியின் பிளாஸ், கையடக்கத் தொலைபேசி, பல் அலைவரிசை வானொலிகள், கணனிகள் போன்றவைகள் இத்தகைய தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விசா இன்றி அமெரிக்காவிற்குள் நுழைவதற்கான விசேட சலுகைளை அண்மையில் அமெரிக்கா ரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, உலகில் மிகப் பெரிய விமான சேவை என வர்ணிக்கப்படுகின்ற அமெரிக்கன் எயர் லைன்ஸின் வர்த்தக விமான சேவையில் விமானிகள் தமது அறைக்குள் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தக விமானங்களை கடத்தும் முயற்சிகள் இடம்பெறலாம் என்ற சந்தேகத்தின் காரணமாகவே விமானிகளால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (பி-2)

## போரை நிறுத்தி பேச்சுநடத்த இந்தோ. தீவிரவாதிகள் அழைப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸின் வலிமைவாய்ந்த முஸ்லிம் போராளிகள் குழுவின் தலைவர் மரணமானதையடுத்து 31 வருட கால பிரிவினைப் போருக்கு முடிவு காணும் வகையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அக்குழு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

பொதுவாக வெளியில் தோன்றியிராத மோரோ இஸ்லாமியப் போராளிக்குழுவின் தலைவர் காசிம் ஷெலமற் ஜூலைமாதம் 13ஆம் திகதி மாரடைப்புக் காரணமாக மரணமானார். இதனையடுத்து இந்த அமைப்பின் தலைமை அரசியல் அதிகாரி கஸாலி ஜாபா பேச்சுக்களுக்காக அழைப்பு விடுத்துள்ளார்.

பேச்சுக்களை ஆரம்பிக்கும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க இரு தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளன.

முன்னைய சமாதான முயற்சிகளின்போது மத்தியஸ்தம் வகித்த மலேஷியா இப்போர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்கென இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை பிலிப்பைன்ஸிற்கு அனுப்பி வைக்கவுள்ளது. (பி-2)

## பாதுகாப்பு வேலிக்கு எதிர்ப்பு 47 பலஸ்தீனர் கைது


(ரெல்அவிவ்)

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனருக்கும் இடையே பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்கான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 47 பேரை இஸ்ரேலியப் படையினர் தடுத்து வைத்துள்ளனர்.

மேற்குக்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த எல்லைப் பாதுகாப்புச் சுவருக்கு தொடர்ச்சியாக எதிர்ப்புகள் காட்டப்பட்டு வருகின்றன.

அரைப் பகுதி வேலியாகவும், அரைப் பகுதி சுவராகவும் அமைக்கப்படுகின்ற இந்தப் பாதுகாப்பு வேலி பல பலஸ்தீனக் குடும்பங்களின் சொத்துக்களைப் பிரிப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனாலும் இஸ்ரேல் மீது மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களில் இருந்து அதனைப் பாதுகாப்பதற்கு இந்தத் தடுப்பு வேலி அவசியமானது என்று இஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

இந்தப் பாதுகாப்பு வேலி அமைக்கும் முயற்சி அமெரிக்காவின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்று அமெரிக்கா தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (பி-2)




## அதிபர் ரெயிலர் வெளியேறும் வரை தலைநகரில் இருந்து நகர்வதில்லை!

### லைபீரிய தீவிரவாதிகள் அறிவிப்பு

(மன்ரோவியா)

மன்ரோவியாவில் இருக்கின்ற முக்கிய துறைமுகப் பகுதியில் இருந்து தமது படையினர் வாபஸ் பெற்ற போதிலும் ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் நாட்டைவிட்டு வெளியேறும் வரை தலைநகரில் இருந்து வாபஸ் பெறப்போவதில்லை என்று லைபீரிய தீவிரவாத அமைப்பின் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் கோரிக்கைக்கமைய சார்ள்ஸ் ரெயிலர் நாட்டைவிட்டு வெளியேற மறுத்தால் அவரைத் தாக்கப்போவதாக தீவிரவாத அமைப்பின் தளபதியான மேஜர் ஜெனரல் சீஜேஸ் ஷெரீவ் கூறியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியும் முன்னாள் தீவிரவாதியுமான சார்ள்ஸ் ரெயிலர் தங்களை ஏமாற்ற முயலலாம் என்று அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, உதவி ஜனாதிபதி மோஸஸ் பிளாவிடம் ஆட்சிப் பொறுப்பை எதிர்வரும் திங்களன்று ரெயிலர் கையளிப்பார் என்றும், அன்றைய தினம் அல்லது அதற்கு மறுநாள் அவர் நாட்டைவிட்டு நைஜீரியாவிற்கு செல்வார் என தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ மெக்கி கூறியிருக்கின்றார். (பி-2)

## லைபீரிய கடற்பரப்பில் யு.எஸ். போர்க் கப்பல்கள்

லைபீரியாவில் மேற்கொள்ளப் படும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்காக அமெரக்கப் போர்க் கப்பல்கள் அந்நாட்டின் கடற்பரப்பிற்குள் பிரவேசித்திருக்கின்றன.

ஆனால் தமது தரைப் படைகளை லைபீரியாவிற்குள் அனுப்புவதா என்பதை அமெரிக்கா தீர்மானிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

லைபீரியாவில் 14 வருடங்களாகத் தொடரும் படுகொலைகள், வன்முறைகள் என்பவற்றை கட்டுப்படுத்தும் முயற்சிகளில் மேற்காபிரிக்க அமைதிகாக்கும் படையொன்று களமிறங்கியுள்ளது.

அந்நாட்டில் கடந்த சில நாட்களாகத் தீவிரமடைந்துள்ள சண்டை பொதுமக்களைப் பலிகொண்டுள்ளதுடன் பட்டினி, நோய் என்பவற்றை ஏற்படுத்தியுள்ளது. (பி-2)

## பூட்டோ தம்பதிகளுக்கு எதிராக சுவிஸ் நீதிமன்றம் தீர்ப்பு

(பெர்ன்)

முன்னாள் பாகிஸ்தானின் பிரதமர் பெனாஸிர் பூட்டோ மற்றும் அவரது கணவர் அஸீஸ்ஷர்தாரி ஆகியோருக்கு எதிராக தவறான பணக் கையாள்கை தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் நீதிபதி டானியல் இவர்களுக்கு எதிராக 6 மாத கால ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையை விதித்துள்ளார்.

அத்தோடு இருவருக்கும் தலா 50 ஆயிரம் டொலர் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதோடு பாகிஸ்தானிய அரசாங்கத்திற்கு 2 மில்லியன் டொலர் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து வங்கியில் பெனாஸிர் பூட்டோவும் அவரது கணவரும் சட்டவிரோதமான முறையில் பல மில்லியன் பணத்தை வைப்பில் இட்டுள்ளதாக தெரிவித்துள்ள நீதிபதி அதனைப் பாகிஸ்தானிய அர சாங்கத்திற்கு மீள வ்ழங்கும் படியும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள பெனாஸிர் பூட்டோ மேன்முறையீடு செய்வது தொடர்பாக ஆலோசித்து வருவதாக அறிவித்துள்ளார்.

தற்போது பாகிஸ்தானிலிருந்து வெளியேறி பிரித்தானியாவில் வசித்து வருகின்ற பெனாஸிர் பூட்டோவுக்கு எதிராக ஏற்கனவே பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பாகிஸ்தான் அரசினால் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## இன்று ஒரு தகவல்

# காய்ச்சல்

முகம் எப்போது சிவக்கும்? கோபம் வந்தால் சிவக்கும். வெட்கம் வந்தால் சிவக்கும். அதுபோல் காய்ச்சல் வந்தாலும் சிவக்கும். அதனால் ஒருவர் காய்ச்சல் வந்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும்போது, அவர் வெட்கப்படுகின்றார் என்று எண்ணிக்கொண்டு விலகிப் போய்விடக் கூடாது. அருகில் போய் என்னென்று விசாரிக்க வேண்டும்.

காய்ச்சல் என்பது ஒரு நோய் அல்ல. நோய் உள்ளதாக அறிவிக்கும் ஓர் அறிகுறியே காய்ச்சலாகும். வானிலை முன்னறிவிப்பு என்று கூறுகின்றோமல்லவா? அது போல, இது உடல் நிலை முன்னறிவிப்பு. நமது உடலில் எப்போதும் வெப்பம் இருந்துகொண்டேயிருக்கும். தேவையான அளவுக்கு இருந்தால் அதை சாதாரணம் (Normal) என்று கூறுவோம். இருக்கவேண்டிய அளவை விட அதிகமாக இருந்தால் அதை காய்ச்சல் என்கின்றோம். நமது உடலில் உள்ள உறுப்பு அல்லது திசு பாதிப்படைந்து உள்ளது என்பதை உணர்த்தும் ஓர் அடையாளமே காய்ச்சலாகும்.

மருத்துவ ரீதியான விளக்கம் என்ன தெரியுமா? இப்பொழுது தெற்று வியாதியினால் ஒரு திசு பாதிப்படைந்திருக்கின்றது என வைத்துக்கொள்ளுங்கள். அதை உடனே உடலில் இருந்து வெளியேற்ற முயற்சி நடக்கின்றது. இரத்தத்தில் உள்ள வெள்ளணுக்கள் போர் புரியும். சிப்பாய்கள் இவை பாதிக்கப்பட்ட திசுவை சுற்றி வளைத்து அதனை விழுங்கிவிட முயற்சி செய்கின்றது. இந்த முயற்சியில் பல வெள்ளணுக்கள் இறந்து விடும். அப்படி இறக்கும்போது Pyrogens எனும் பொருளைச் சுரக்கின்றது. இந்தப் பொருள் உஷ்ணத்தைச் சுரக்கின்றது. இதனால் காய்ச்சல் வருகின்றது. இதுவே மருத்துவ விளக்கம்.

உடலில் உஷ்ணம் அதிகரிக்கும்போது எல்லா முக்கிய உறுப்புக்களுக்கும் அபாய அறிவிப்புச் செல்கின்றது. உடலின் சூட்டைத் தணிப்பதற்கு ஒரு யுத்தம் நடக்கின்றது. தோலில் உள்ள ரத்தக் குழாய் விரிவடைகின்றது. இதனால் முகம் சிவக்கின்றது. இருதயம் வேகமாக இயங்குகின்றது. ஏனென்றால் அப்போது தான் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். பாதிக்கப்பட்ட வெள்ளணுவை அகற்ற முடியும். சுகாதாரமான அணுக்களின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இந்த யுத்தம் வெற்றி பெறும் சமயத்தில் எமக்கு வியர்வை உண்டாகும். அதனால் சூடு தணியும்.

சரி இவையெல்லாம் இருக்கட்டும். காய்ச்சல் உடலுக்கு நல்லதா? கெட்டதா? இதற்கு முடிவான பதிலை இதுவரை யாரும் கூறவில்லை. காய்ச்சலினால் இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. கிருமிகளைக் கொல்வதற்கு அதிகமான வெள்ளணுக்களை உற்பத்தி செய்கின்றது. இது தான் உண்மை. காய்ச்சல் ஒரு வியாதி இல்லையே என்று நினைத்து அலட்சியமாக இருந்து விடக்கூடாது. 100டிகிரிக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அதிக கவனம் எடுக்கவேண்டும். 103 டிகிரி இருந்தால் மூளை தற்காலிகமாக பாதிக்கப்படலாம். தெளிவற்றிருத்தல், அமைதியில்லாமல் இருப்பது, ஜன்னி வந்து பிதற்றல் இவையெல்லாம் இருக்குமாம். 106டிகிரிக்கு மேல் போனால் மூளை நிரந்தரமாகப் பாதிக்கும். ஆனால் 109 டிகிரி காய்ச்சல் வந்து அதற்கும் குட்பை சொல்லி தப்பித்தவர்களும் உள்ளனர். சிறுவர்களுக்கு சாதாரண தடிமன் வந்தால் கூட 105 டிகிரி காய்ச்சல் இருக்கும். அதற்காக பயப்படவேண்டியதில்லை. ஆனால் பெரியவர்களுக்கு 105 டிகிரி காய்ச்சல் இருந்தால் அது கஷ்டமாக இருக்கும்.

அது சரி ! காய்ச்சல் வந்தால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர் தெரியுமா? திரவ உணவை உட்கொள்ள வேண்டும். வியர்வையால் ஏற்படும் இழப்பை இது சரி செய்யும். நல்ல ஓய்வும் ஊட்டமும் தேவை. காய்ச்சல் வந்தால் பட்டினி கிடக்க வேண்டும் என்பர் சிலர் அது தவறு. இந்தச் சமயத்தில் புரதச்சத்து அதிகம் கிடைக்க வேண்டும். ஏனென்றால் காய்ச்சலால் புரதச்சத்து அதிகமாக எரிக்கப்படும். இதனை ஈடு செய்ய வேண்டுமல்லவா? அதனால் பட்டினிகிடக்கக்கூடாது.

சாதாரண காய்ச்சலுக்கு எல்லாம் பயப் படக்கூடாது. நாம் பயந்தால் காய்ச்சலுக்குத் துணிவு வந்து விடும். அதனால் அது அதிகமாகிவிடும். சிலர் மருத்துவரிடம் செல்வர். பில்லைப்பார்த்தவுடன் தான் காய்ச்சல் அதிகமாகும். காய்ச்சலை குறைக்க இது வரை யாரும் மருந்து கண்டு பிடிக்கவில்லை. இதே மாதிரி வேறு சில காய்ச்சல்களும் உண்டு. பரீட்சை காய்ச்சல் என்று ஒன்று, பரீட்சை நெருங்கினால் போதும் சரியாகப் படிக்காத பிள்ளைகளுக்கு இந்தக்காய்ச்சல் வரும். தேர்தல் நெருங்கினால் வரும் காய்ச்சல் தேர்தல் காய்ச்சல் . 103 டிகிரிக்கு மேல் போனால் பேச்சில் தெளிவிருக்காது. ஏதோ ஒரு வியாதிக்கு அறிகுறி தான் காய்ச்சல் என்று மருத்துவம் கூறுகின்றது. அப்படி என்றால்...தேர்தல் காய்ச்சல் ?

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 25 பேர் பலி

(கொழும்பு)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைபபுலிகளும், யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின் இன்று வரை சுமார் 25 இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலியாகியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பலியான 25 பாதுகாப்புப்படையினரில் இராணுவத்தினர் 4பேரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 8பேரும் இராணுவ சிவில உத்தியோகத்தர்கள் 11 பேரும் பொலிஸார் இருவரும் அடங்குவர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்றதை அடுத்துப் புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டகாலம் வரை இராணுவத்தையும் பொலிஸையும் சேர்ந்த 14பேர் பலியாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டேஸ் பிள்ளையின் சார்பில் மங்கள சமரவீராவினால் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பலிலாளிக்கும்போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, ஐக்கியதேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த காலப் பகுதியில் எத்தனை பாதுகாப்பு நிலைகள் காணப்பட்டது? அவற்றில் இது வரை எத்தனை பாதுகாப்பு நிலைகள் அகற்றப்பட்டிருக்கின்றன? என்ற கேள்விக்கு பதிலளித்துபேசிய உள் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க,

ஐக்கியதேசிய முன்னணி பதவிக்கு வந்தபோது அதாவது 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதியில் வடக்கு-கிழக்கில் முப்படைகளினதும் பொலிஸாரினதும் முகாம்கள் மற்றும் காவல் அரண்கள, வீதிச் சோதனைச்சாவடிகள், பதுங்குழிகள் என ஆயிரதிற்கும் மேற்பட்ட பாதுகாப்பு நிலைகள் இருந்தன.

அவற்றில் 56 பாதுகாப்பு நிலைகள் இது வரை அகற்றப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கியதேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் காணப்பட்ட 1454 பாதுகாப்பு நிலைகளில் மிகச் செற்பமான அளவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அகற்றப்பட்டிருப்பது குறிப்படத்தக்கது.

(வ-10)

## யுனிசெவ் அனுசரணையுடன்

# வலிகாமம் வலயப் பாடசாலைகளில் குடிநீர்தாங்கிகள் அமைக்கத்திட்டம்

(சுதுமலை)

வலிகாமம் கல்வி வலயத்தில் இந்த வருடம் 18 பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் குடிநீர் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மருதனார்மடம் வலயப்பணி மனையில் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பழைக் கோட்டக்கல்வி அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட 18 பாடசா லைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பாடசாலைகளிற்கு பொறுப்பான பொதுச்சுகாதாரப் பரிசோதர்கள், யுனிசெவ் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யுனிசெவ் பிரதிநிதி சிறிஸ்கந்தராசா அங்கு உரை நிகழ்த்தும் போது, எமது நிறுவனம் பலதரப்பட்ட செயற்திட்டங்களை யாழ். மாவட்டத்தில் அரசாங்க அதிபர், பிரதேச செயலகங்கள் ஊடாகவே செயற்படுத்தி வந்தது. இம்முறை தான் முதன் முதலாக பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் ஒத்துழைப்புடன் அதாவது சமூகத்தின் ஒன்றிணைந்த பங்களிப்புட[illegible] இந்தத் திட்டம் செயற்ப்படுத்தப்பட[illegible] வுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மின் மோட்டார் பொருத்தப்பட்ட குடிநீர் தாங்கி அமைக்கப்பட்டு நீர்விநியோகம் செய்வதற்கு வழிவகை செய்யப்படும்.

மின்சார வசதி இல்லாத பா[illegible]லைகளின் குடிநீர் தேவை[illegible] கருத்திற்கொண்டு மின் பிறப்பாக்கி மூலம் நீர் தாங்கிக்கான நீரைப்பெறுவதற்கான திட்டம் செயற்ப[illegible]படவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் எதிர் வரும் டிசம்பர் மாதம் 3 ஆம்திகதிக்குமுன்னர் சகல வேலைகளையும் நிறைவேற்ற நட[illegible]வடிக்கை எடுக்கப்[illegible] வேண்[illegible] என[illegible] தெரிவித்தார்.

(உ-25)

## இராசி பலன்

**07. 08. 2003**

**(ஆடி 22, வியாழன்)**

**தசமி - மு. இ. 07.13 வரை**

**அனுசம் - பி.ப. 12. 57 வரை**

**இராகுகாலம் - 1.34 - 03.04**

**சுபநேரம் - 07.34- 09.04**

**மேடம்**
அமைதிக்குறைவு, போசன நன்மை, உறவினர் மனஸ்தாபம், திடீர் நன்மை.

**இடபம்**
சினேகிதர் சந்திப்பு, நல்ல முயற்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும்.

**மிதுனம்**
பணவருவாய், சத்துருஜெயம், சுக வாழ்வு, காரிய நன்மை.

**கடகம்**
மனச்சோர்வு, சிறு வியாதி, வேலைக் கஷ்டம், சொத்துக்களால் கவலை.

**சிங்கம்**
கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, பயந்த சுபாவம், திடீர்பயணம்.

**கன்னி**
இனிய அனுபவம், புதிய பொருள் சேர்க்கை, வாக்குமேன்மை, முயற்சி கைகூடும்.

**துலாம்**
மதிப்புக்குறைவு, தொழில்நிலை மாற்றம், பொருள் விரயம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
பெரியோர் ஆசி, எடுத்த கருமங்கள் கைகூடும், சயனசுகம், போசன சுகம்.

**தனுசு**
பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படுதல், சகோதரர் வழி நன்மை, முயற்சி தாமதம்.

**மகரம்**
தொழில் சிந்தை, எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல வருமானம, கலந்துரையாடல்.

**கும்பம்**
சுப நிகழ்ச்சி, உற்சாகம், நல்ல செய்தி, பிறர் ஒத்துழைப்பு.

**மீனம்**
புதிய திட்டமிடல், உடல் நலக்குறைவு, அச்சமான நிலை, காரியதாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# கொழும்பு பிரதி மேஜருக்கு எதிரான மனு தள்ளுபடி

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் பிரதி மேஜர் அசாத் சாலிப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் முறையீட்டு நீதி மன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்துள்ளது.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் அசாத் சாலிப் போட்டியிடாத போதும், பிரதி மேஜராக தெரிவு செயயப்பட்டுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டே இம் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்று மேன் முறையீட்டு நீதி மன்றத்தில இம்மனு விசாரணைக்கு எடுத்துககொள்ளப்பட்ட போது, பிரதி மேஜா சார்பாக முன்வைக்கப்பட்ட 9 ஆட்சேபனைகளையும் நீதி மன்றம் ஏற்றுக்கொண்டதன் காரணத்தால் இம் மனுவை தள்ளுபடி செய்துள்ளதாக மேன்முறையீட்டு நீதிபதி நிஷங்க உதலாகம தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பிரதி மேஜருக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஏனைய மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. (தி)

# நட்டஈடு தொடர்பாக ஆராய குழு அமைப்பு

(கொழும்பு)

ஒலுவில் துறைமுக அமைப்புக்குத்தேவையான உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டிய நட்டஈடு தொடர்பாக ஆராய்வதற்கென விசேட செயற்குழு ஒன்றை துறைமுக அபிவிருத்தி கப்பல் துறைமுக அமைச்சர் ரவூக் ஹக்கீம் நியமித்துள்ளார்.

ஒலுவில் துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்காக கையேற்கப்படுகின்ற காணிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக தற்போது சிபார்சு செய்யப்பட்டுள்ள நட்டஈட்டுத்தொகை போதாது என அக்காணி உரிமையாளர்களால் முன்னர் தெரிவிக்கப்பட்ட முறையீட்டை ஆராய்வதற்காக அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது இவ் விசேட செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கையேற்க உத்தேசிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் போது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளின் அடிப்படையில் வழங்கபபடக்கூடிய அதிகூடிய தொகையே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல விடயங்களையும் கருத்தில கொண்டு காணி இழப்போருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான நட்ட ஈட்டுத் தொகையை அரச தொகை மதிப்பீட்டு அதிகாரி இலங்கைத் துறைமுக அதிகாரிசபை, திறைசேரி மற்றும் துறைமுக அபிவிருத்தி, கப்பல் துறை அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கையளிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான விபரங்களைத் திரட்டுமுகமாக இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் பிரதி தலைவர் எம்.எச்.எம். சல்மான் தலைமையிலான குழுவொன்றை இன்னும் சில தினங்களில் அங்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-8)

யாழ்ப்பாணம்.



# தமிழ் மொழியின் பெருமை காத்த

# கம்பவாரிதிக்கு இருபெரும் விருதுகள்

ஈழத் தமிழ் உலகின் தலை சிறந்த பேச்சாளரும், அகில இலங்கை கம்பன் கழக ஸ்தாபகருமான ''கம்பவாரிதி'' இ.ஜெயராஜ் அவர்களுக்கு தமிழரின் தாய் நாடாகிய தமிழகத்தில் இரண்டு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னைக் கம்பன் கழகத்தினரால் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்ற ''கம்பகலாநிதி'' இரா.இராதகிருஷ்ணன் நினைவு விருதையும், பேராசிரியர் அறவாணன் அறக்கட்டளை ஆண்டுதோறும் வழங்கி வருகின்ற ''சர்வதேச ரீதியான அறவாணர் சாதனை விருதி''னையும் பெற்றுக் கொண்டுள்ள கம்பவாரிதி மீண்டுமொருதரம் ஈழத்தமிழ் இலக்கிய உலகத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.

கடந்த 8ம் திகதி முதல் சென்னை, இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றுவரும் இவ்வாண்டுக்கான கம்பன் விழாவின் முதல் நாளான கடந்த வெள்ளிக்கிழமை ''கம்பகலாநிதி இரா.இராதாகிருஷ்ணன் நினைவு விருது'' கம்பவாரிதிக்கு வழங்கப்பட்டது. இவ்விருது கம்ப இலக்கிய உலகில் அர்ப்பணிப்பு உணர்வோடு செயற்பட்டு வருகின்ற ஒருவருக்கு ஆண்டு தோறும வழங்கப்பட்டு வருவதாகும். இவ்வாண்டு இவ்விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கம்பவாரிதி மும்முறைகள் கம்ப இலக்கியத்துக்குப் பாடுபட்டவராகக் காணப்படுகின்றார்.

## கம்பராமாயண தொடர் சொற் பொழிவுகள்

பொதுவாக ஈழம் முழுமையிலும் அதிலும் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கம்பவாரிதி ஆற்றிய கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் உண்மையாகவே கம்ப இலக்கியத்துக்குச் செய்யப்பட்ட உயர் கௌரவிப்புகளாகவே கருதப்படத்தக்கன. அதுவும் கடும் போராட்டச் சூழ்நிலையில், மின்சார வசதிகூட இல்லாதிருந்த எண்பதாம், தொண்ணூறாம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாண மக்களின் அறிவுப் பசிக்கு விருந்தளித்த கம்பவாரிதியின் இத்தொடர்சொற்பொழிவுகள் பெருஞ்சாதனைகளே. குறிப்பாக திருநெல்வேலி - கலட்டி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கம்பவாரிதியின் கம்பராமாயணச் சொற்சொழிவுகளுக்குத் திரண்டளவு ரசிகர்கள், தமிழகத்தில் புகழ்பூத்த பேச்சாளர் ஒருவரது சொற்பொழிவுக்குக் கூடத் திரள மாட்டார்கள் என்பது உண்மை.

## கம்பன் கழகத்தின் மூலம் நடாத்திய விழாக்கள்

கம்பராமாயண இலக்கியத்திற்குப் பணியாற்றுவதற்காகவென கம்பவாரிதி அவர்கள் கம்பன் கழகத்தை ஸ்தாபித்தார்கள். 2005ஆம் ஆண்டில் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடவுள்ள அகில இலங்கைக கம்பன்கழகத்தின் மூலம் தன் நண்பர்களதும், அன்பர்களதும் உதவியுடன ''கம்பவாரிதி'' நடாத்திய கம்பன் விழாக்கள், இலக்கியவிழாக்களுக்கான இலக்கண மாதிரிகளாக அமைந்து சிறந்தன. இன்றுவரை, ஈழத்தமிழ் இலக்கிய உலகின் தலைமை விழாவாகக் கம்பன் விழாவே திகழ்கிறது என்றால் அதற்குப் பின்னின்றுழைக்கும் கம்பவாரிதியின் ஆளுமை முக்கியமான ஒரு காரணியாகும். நாட்டுச் சூழ்நிலையால் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து கொழும்பு சென்றபோதும், தனது இலட்சியத்திற் தளராது தமிழகப் பேச்சாளர்களே வியக்கும் வகையில் கொழும்புக் கம்பன் விழாக்களை நடாத்திவருகிறார் கம்பவாரிதி. இவ்வகையில் இவ்விழாக்களூடு தனக்குப் பின் ஒரு பேச்சாளப்பரம்பரை உருவாகவும் வழிசமைத்துள்ளார்.

## கம்ப இலக்கிய எழுத்துப் பணி

பேச்சால் மட்டும் கம்பன் புகழ் பரப்பி வருவதோடு அமையாமல் எழுத்துக் கலையாலும் பணியாற்றுகிறார் கம்பவாரிதி. அவரது முதல் நூல் கம்பராமாயணக் கட்டுரைகளின் தொகுப்பாகிய ''அழியா அழகு'' என்பதாகும். பேராசிரியரும், புகழ் பெற்ற திறனாய்வாளருமான அ.ச.ஞானசமபந்தன் அவர்கள், ''அழியா அழகு'' நூலைப்பற்றிக் குறிப்பிடுகையில், ''கம்பனைப் பற்றிய பலப்பல நூல்கள் வெளிவந்துள்ளன. திறனாய்வு முறையில் வந்த நூல்களுள் தலைமையிடத்தைப் பெறுகிறது ஜெயராஜின் அழியா அழகு'' என்று கருத்துத் தெரிவித்துள்ளமையை நோக்கினால கம்பவாரிதியின் கட்டுரைவன்மை புலனாகும்.

இவ்வாறு சொற்பொழிவு, விழா, எழுத்து என்கின்ற மும்முனைகளில் முயன்று, கம்ப இலக்கியத்தைப் பரப்பவென இல்லறத்தில் ஈடுபடாது பாடுபட்டு வரும் 'கம்பவாரிதி' ஜெயராஜ் அவர்களை விருது வழஙகிக் கௌரவிப்பதன் மூலம, சென்னைக கம்பன் கழகம் ஈழத்தமிழ் உலகினையும் கௌரவித்துள்ளது எனல் வேண்டும்.

மற்றைய விருதானது, பேராசிரியர் அறவாணன் அறக்கட்டளையினரால் சென்னையிலுள்ள பொன்மணி வைரமுத்து மாளிகையில் வைத்து வழங்கப்பெற்றது. இது தமிழ்ச்சாதனையாளர் ஒருவருக்கு சர்வதேச அளவில வழங்கப்படும் விருதாகும். 2002ஆம் ஆண்டுக்கான விருதையே மேற்படி அறக்கட்டளையினர் கம்பவாரிதிக்கு வழங்கியுள்ளனர்.

2002ஆம் ஆண்டில் கம்பவாரிதி ஆற்றிய பணிகளை மேற்படி அறக்கட்டளை அறிஞர்கள் சிலாகித்துப் போற்றியுள்ளனர்.

வழமையாக ஆற்றிவரும் கம்பன் கழகத்தினூடான விழாக்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றுக்காகவும், கொழும்பில், வார இறுதி நாட்களில் நீண்டகாலமாக நடாத்திவரும் சித்தாந்த, திருக்குறள் வகுப்புகளிற்குமாக இச்சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சமூக, அரசியற்றுறை சார்ந்த நூலான ''பழம் பண்டிதரின் பகிரங்கக் கடிதங்கள்'' என்னும் நூலை வெளியிட்டமையும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் சிறப்பாக ''சுவிஸ்லாந்தில் மாபெரும் கம்பன் விழாவை நடாத்தியமைக்காகவும், கம்பன் கழகங்கள் இணைந்து உலக மாநாடுகள் நடாத்துவதற்கான மூல முயற்சிகளை மேற கொண்டமைக்காகவும் இவ் அறக கட்டளையினரால் கம்பவாரிதி பெரிதும் பாராட்டப்பட்டுள்ளார்.

இவ்விரு விருதுகளையும் பெறுவதற்காகச் சென்னைக்குப் பயணமாகியுள்ள கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள், இவ்வாண்டு சென்னைக் கம்பன் விழாவில் வழக்காடு மன்றம், பட்டிமண்டபம் போன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகெண்டு உரையாற்றவுள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தை யொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடை பெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 5ஆம் திருவிழாவான இன்று, பிரியங்கன் பாலச்சந்திரனின் புல்லாங்குழலிசையும் சரவணன் ஜெயநாதனின் பாட்டுக்கச்சேரியும் இடம் பெறவுள்ளது. (உ-18)

## ஆன்மீக நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை போயா நிகழ்ச்சிகள் அதிகாலை 5.00 மணிக்கு, நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறவுள்ளன. (உ)

## பரிபாலனசபை ஒன்றியம் அமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலன சபை ஒன்றியம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கடந்த ஞாயிறன்று இந்து ஆலயங்களின் அங்கத்தவர்களினால் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே இவ் ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.


இந்து ஆலயங்கள் வழிபாட்டிடங்கள் என்பது மட்டுமின்றி சமூக நலன்களைப் பேணும் நோக்கில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்ற இலக்குடன் இவ் ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவராக த.சாந்தகிருஷ்ணனும் செயலாளராக ந.பத்மநாதனும் பொருளாளராக வ.அமிர்தலிங்கமும் தெரிவு செய் யப்பட்டனர். (ந-43)

---

# விளையாட்டுச் செய்திகள்





## சஞ்சீவன் ஞாபகார்த்த கிரிக்கெற் போட்டி

(யாழ்ப்பாணம்)

2000ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா யாழ். மாவட்டப் பொறுப்பாளர்,

அதிலும் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கம்பவாரிதி ஆற்றிய கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் உண்மையாகவே கம்ப இலக்கியத்துக்குச் செய்யப்பட்ட உயர் கௌரவிப்புகளாகவே கருதப்படத்

இலக்கிய உலகின் தலைமை விழாவாகக் கம்பன் விழாவே திகழ்கிறது என்றால் அதற்குப் பின்னின்றுழைக்கும் கம்பவாரிதியின் ஆளுமை முக்கியமான ஒரு காரணியாகும். நாட்டுச் சூழ்நிலையால் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்

பரப்பவென இல்லறத்தில் ஈடுபடாது பாடுபட்டு வரும் 'கம்பவாரிதி' ஜெயராஜ் அவர்களை விருது வழங்கிக் கௌரவிப்பதன் மூலம, சென்னைக கம்பன் கழகம் ஈழத்தமிழ் உலகி

அவர்கள், இவ்வாண்டு சென்னைக் கம்பன் விழாவில் வழக்காடு மன்றம், பட்டிமண்டபம் போன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகெண்டு உரையாற்றவுள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவராக த.சாந்தகிருஷ்ணனும் செயலாளராக ந.பத்மநாதனும் பொருளாளராக வ.அமிர்தலிங்கமும் தெரிவு செய் யப்பட்டனர். (ந-43)

# விளையாட்டுச் செய்திகள்

# ஆஸி.உருவாக்கியுள்ள

# அதி சிறந்த வீரர் ஸ்ரீவ்வோ

கிரிக்கெற் துறையில் டொனால்ட் ஃபிரெட்மனுக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலியா உருவாக்கியுள்ள அதி சிறந்த வீரர் ஸ்ரீவ்வோ என்று ஜெஸ்மார்ஸ் கூறியுள்ளார்.

அண்மையில் சிம்பாவே கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் பதவியைப் பொறுப்பேற்ற அவுஸ்திரேலியாவின் முன்னால் கிரிக்கெற் வீரரான ஜெஸ்மார்ஸ் மேலும் கூறுகையில்,

ஃபிரெட்மன் கிரிக்கெற் துறையில் தன்னிகரற்றவராகத் திகழ்கின்ற போதிலும் அவரைப்போல ஸ்ரீவ்வோவின் சாதனைகளும் அவரது திறமைக்கு சான்று பகர்கின்றன.

ஸ்ரீவ்வோவின் தலைமைத்துவம் அவரது திறமைகளுக்கு சான்று பகர்வதுடன், துடுப்பாட்ட ஆற்றலும் அதற்கு மேலும் வலுசேர்க்கின்றது என்று, கிரிக்கெற் போட்டிகளின் போது ஸ்ரீவ்வோ குவித்துள்ள சதங்கள் யாவும் சவால் மிக்க சூழ்நிலைகளிலேயே பெறப்பட்டுள்ளன என ஸ்ரீவ்வோவின் முன்னாள் சகவீரரான ஜெஸ்மார்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (உ-68)

# 3 சாதனைகளை நிகழ்த்திய

# யாழ்.பல்கலை வீரர்

இலங்கையிலுள்ள 11பல்கலைக்கழகங்களையும் இணைத்து கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கட்ந்த வார இறுதியில் நடைபெற்ற இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீரரான றஞ்சித்குமார் 3போட்டிகளில் இலங்கை பல்கலைக்கழக மட்டத்தில் புதிய சாதனைகளை நிலைநாட்டியிருக்கின்றார்.

இவர் 110 மீற்றர் தடைதாண்டலை 15.6 செக்கன்களில் ஓடி முடித்துள்ளதுடன், நீளம்பாய்தலில் 6.91மீற்றர் தூரம் பாய்ந்தும், கோலூன்றிப் பாய்தலில் 3.35மீற்றர் உயரத்தைக் கடந்தும் 3 புதிய சாதனைகளை றஞ்சித்குமார் நிகழ்த்தியுள்ளார்.

இம்முறை நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் மொத்தமாக ஆண்,பெண் பிரிவுகளில் 9புதிய சாதனைகளே நிலைநாட்டப்பட்டடிருந்த போதிலும் இப்போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஒரே வீரராக 3 போட்டிகளில் புதிய சாதனைகளை றஞ்சித்குமார் நிகழ்த்தியிருப்பதுடன், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான சர்வதேச போட்டிகளிலும் இவர் கலந்து கொள்ளவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் யாழ்.மாவட்ட வீர,வீராங்கனைகள் வெற்றிபெற்றிருந்த வேளையிலும் களனிப் பல்கலைக்கழகமே இவ்வாண்டுக்கான பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் 141புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தினை தனதாக்கிக் கொண்டுள்ளது. (உ-68)


# சஞ்சீவன் ஞாபகார்த்த கிரிக்கெற் போட்டி


(யாழ்ப்பாணம்)

2000ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெற் போட்டி பற்றிய கலந்துரையாடல் கடந்த திங்களன்று தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை யாழ்.அலுவலகத்தில் தமிழீழ மாணவர் அமைப்பு ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் தமிழீழ கல்விக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர், யாழ். மாவட்டத்தின் கல்வி வலயங்களைச் சார்ந்த உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது போட்டி தொடர்பான பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன், போட்டிக்கான விண்ணப்பங்களும் பாடசாலைகளிலிருந்து கோரப்பட்டுள்ளன.





பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட உலகளாவிய அங்கவீனர் தினமான கடந்த 20ஆம் திகதியன்று யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 40அங்கவீனர்களுக்கு உடுபுடவைகளும் சிற்றுண்டியும் வழங்கும் போது எடுக்கப்பட்ட படங்கள்

### மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்

# ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று

# பெண்கள் அமைப்புக்களைச் சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கும் விஜயம் செய்து அங்குள்ள பெண்கள் அமைப்புக் களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திவருகின்றார்.

இந்த வகையில் இத்தாலி சென்று கருத்தரங்குகளை நடத்தி வந்த தமிழினி நேற்று டென்மார்க் புறப்பட்டுள்ளார்.

இவர் டென்மார்க்கில் தமிழீழப் பெண்களின் பல்வேறு பரிமாணங் களையும் வெளிப்படுத்துவதுடன், புலம் பெயர் தமிழீழப் பெண்களின் வாழ்நிலைச் சூழலைப் புலப்படுத்து கின்ற வகையில் கருத்தரங்குகளை யும் நடத்தவுள்ளார்.

இக்கருத்தரங்கு நிகழ்வுகளில் தமிழீழ பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் கலைமகளும் கலந்து கொள்ளவுள்ளார்.

ஒருவார காலத்திற்கு டென் மார்க்கில் தங்கியிருக்கும் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி அங்கு கொய்டன் நகர், டீனலியூன் பீ.பி.லோ ரிக்சிற்றி நியூ போநகர், றெனஸ்நகர், ஈகாஸ்நகர், பயன்நகர், மைலாநகர் ஆகியவற் றில் கருத்தரங்குகளை நடத்தவுள் ளதுடன், அங்குள்ள மகளிர் அமைப் புக்களையும் சந்தித்துக் கலந்துரை யாடவுள்ளார்.


டென்மார்க் விஜயத்தை முடித்துக் கொண்டதும் தொடர்ந்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குச்சென்று கருத்தரங்குகளை நடத்துவார் என தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## வர்த்தகக் குழுவினர் சகிதம்

# செவ்வாயன்று பிரதமர் சீனா பயணம்

(கொழும்பு)

உத்தியோக பூர்வ விஜயம்ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 12ஆம்



திகதி செவ்வாய்க்கிழமை சீனா செல்லவிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வர்த்தகக் குழுவொன்றும் அங்கு செல்ல விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி புதன் கிழமை சீனத்தலைநகரில், சீன வர்த்தகத்துறை மற்றும் முதலீட்டுத் துறையின் தொழிலதிபர்கள் உட் பட பல பிரமுகர்களையும் சந்தித் துப் பேச்சுவார்த்தை நடத்தவும் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை வர்த்த கக் குழுவினரை மேற்படி தொழில திபர்கள் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தையினை நடத்துவ தற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அன்றைய சந்திப்பில் ஆராய் வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் மேற்கொள் ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து சீனத்தரப்பினருக்கு விளக்கமளிக்கும் வகையிலேயே இலங்கை வர்த்த கக் குழு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் சீனாவிற்குச் செல்ல விருப்பதாக கூறப்படுகிறது. (உ-10)

### சிறைச்சாலைகளில் நிலவும்

# குற்றச் செயல்களைத் தடுக்க

# விசேட சுற்றிவளைப்புப் பிரிவு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நடைபெறும் குற்றச் செயல்களைத் தடுப்பதற் காக விசேட சுற்றிவளைப்புப் பிரி வொன்று அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்துச் சிறைச் சாலைகளையும் உள்ளடக்கும் வகை யில் இப்பிரிவு செயற்படும் என சிறைச் சாலை ஆணையாளர் நாயகம் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளுக்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதனால், பல மோசடி கள் இடம்பெற்றுவருவதாக முறைப் பாடு செய்யப்பட்டதை அடுத்தே இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெலிக்கடைச் சிறைச் சாலைக்குள் சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள், போதைப் பொருள் பொதிகள் என்பனவற்றை சிறைச் சாலை அதிகாரிகள் கைப்பற்றி இருந்தமை தெரிந்ததே. (தி)

### சேதமடைந்த நிலையில் ஒஸ்மானியா கல்லூரி

(கல்வயல்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண் ணையிலுள்ள ஒஸ்மானியாக் கல் லூரி கடந்த 10வருடங்களாகப் புனர

# நல்லூரான் திருவடிக்கு

### (இன்று ஐந்தாம் திருவிழா)



### நண்ணியவர் நற்பிறவி யகலுங்காணே

வேலானை வேல் போலும் விழியினானை
விழிக்கின்ற இமையாகி மணியானானை
பாலானை பாவையர்கள் பரிவினானை
பக்தியுளத் துதிக்கின்ற கதிரானானை
சேலானை சேல்படைத்த செவ்வேளானை
திருமயில்மேல் அழகு பொதிந் திகழுகின்ற
மேலானை நல்லூரில் உறையுந் தேவை
நண்ணியவர் நற்பிறவி யகலுங்காணே

- கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## குறையது தீர்ப்பாய்

நல்லை யாளும் ஞான வேலவா
அல்லல் அழிக்கும் அழகு மயிலவா

திட்டமிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை வர்த்தகக் குழுவினரை மேற்படி தொழிலதிபர்கள் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தையினை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அன்றைய சந்திப்பில் ஆராய்

யில் இப்பிரிவு செயற்படும் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறாம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளுக்குள் தடை செய்யப்பட்ட பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதனால், பல மோசடிகள் இடம்பெற்றுவருவதாக முறைப்

பொதிகள் என்பனவற்றை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றி இருந்தமை தெரிந்ததே. (தி)


# University of Jaffna

## TENDER NOTICE

The Chairman, tender Board, University of Jaffna will receive sealed tenders from Civil works contractors Grade M6 and above registered with (ICTAD) for Interior Decoration work – stage I, Auditorium at Faculty of Medicine, University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer (Civil), University of Jaffna until 20.08.2003 on producing registration book and receipt for the cash payment for the following tender fees at the shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit – Rs. 40,000/-
2. Non – refundable deposit – Rs. 1000/-

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's office, University of Jaffna on or before 03.09.2003 at 10.00a.m

Tender forms may be inspected by the tenderers free of charge at the Planning Branch of this University during office hours if necessary.

*Registrar.*
*University of Jaffna.*

*P.O.Box 57*
*Thirunelvely,*
*Jaffna.*

[C/6553]


## சேதமடைந்த நிலையில் ஒஸ்மானியா கல்லூரி

(கல்வயல்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலுள்ள ஒஸ்மானியாக் கல்லூரி கடந்த 10வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இம்முஸ்லிம் பாடசாலையைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதையும் கல்வி அமைச்சோ அன்றி புனர்வாழ்வு அமைச்சோ இதுவரை மேற்கொள்ளவில்லை.

இதன் காரணமாக அப்பகுதிகளிலுள்ள முஸ்லிம் மாணவர்கள மார்க்கக் கல்வியைப் பெற முடியாதுள்ளதாகவும், மௌலவி ஆசிரியர்கள் தமது சேவையை ஆற்ற முடியாதுள்ளதாகவும் அப்பகுதியில் தற்போது மீளக் குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(உ-111)

## வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

கல்முனை தனியார் பஸ் உரிமையாளர்களும், ஊழியர்களும் நேற்றுக் காலை 8மணி முதல் திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக கல்முனையிலிருந்து அம்பாறை, அக்கறைப்பற்றுக்கான தனியார் பஸ்சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர் என தெரிய வருகின்றது.

அளவுக்கு அதிகமான பஸ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதை இடைநிறுத்தக் கோரியும், அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் களை தடுத்து நிறுத்தக் கோரியுமே இவ்வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. (தி)

## அலங்கார பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மகளிர் குழு ஏற்பாட்டில் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மணப்பெண்,சிகையலங்காரம் மற்றும் கேக் ஐசிங் குறித்த பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 5 தினங்கள் இடம் பெறவுள்ள இப் பயிற்சிப் பட்டறையை கொழும்பிலிருந்து வருகை தரும் துறைசார்ந்த நிபுணர்கள் வழி நடத்தவுள்ளனர். (உ)

திருமயிலமேல் அழகு பொதிந் திகழுகின்ற
மேலானை நல்லூரில் உறையுந் தேவை
நண்ணியவர் நற்பிறவி யகலுங்காணே

- கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## குறையது தீர்ப்பாய்

நல்லை யாளும் ஞான வேலவா
அல்லல் அழிக்கும் அழகு மயிலவா
இல்லை யென்றும் குறையது தீர்ப்பாய்
வல்ல கணபதி சோதரா முருகா!

- வேலணை, பாலா.

## தங்க நிரந்தரத் தீர்வினைத் தா

நம்பினோர் கைதொழும் நாயகனாம் - எங்கள்
நல்லை நகருறை வேலவனாம்
கும்பிடுவோரின் குறைகள் களைந்திட
கோல மயிலில் வருபவனாம்

வெள்ளி வேலாய் அன்று நீயிருந்து - எமக்(கு)
அள்ளி அருள் மழை பொழிந்தவன் நீ
தங்கவே லாய் நீயும் மாறிவிட்டாய் - நாங்கள்
தங்க நிரந்தரத் தீர்வினைத் தா

- கவிமணி அன்னைதாசன்

## அப்பனே வழிகள் சொல்வாய்

யாவும் நீ தந்த சொத்து
யாவும் நீ தந்த பற்று
யாவும் உன் செயலே... வாழ்வின்
நகர்வுமுன் அருளே! சூழும்
தோல்விகள் துயர்கள் தீய்த்துத்
துடக்குகள் கழித்து... நாம்... புன்
ஆசையில் அலைய... பின்னே
செடில் பிடித்திடுமுன் வேலே!

எப்படித் தொழுதுன் அன்பு
எழிலுக்கு நன்றி சொல்வோம்?
எப்படிப்பாடி... உன்... மென்
இனிமையை அளக்கப் போறோம்?
அப்பனே வழிகள் சொல்வாய்
அவற்றுக்கும்; நாளை நாங்கள்
தப்பவும் வைப்பாய்; என்றும்
தமிழ் பாடி உனைத் தொடர்வோம்!

த.செயசீலன்

## நல்லூரானே நலம் அருள்வாயே!

நாளும் உனைத் தொழுகிறோம் நல்லூர்க் குமரா!
நாடும் எமைக் காத்தருள்வாய் கந்தவேளே
பாடும் எமது உள்ளம் பக்திப் பரவசத்தால்
தேடும் உன் திருமுகம் காண ஒரு மனத்தால்
ஆடும் மயிலேறி வந்து நலம் அருள்வாயே!

வ.காந்திமதி நாதன், கொற்றாவத்தை

மாநகராட்சி மன்ற... யாழ்ப்பாணம்.

# முன்னாள் அரசாங்க அதிபருக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதனுக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் குற்றவியல் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குத்தொடர்பான விசாரணை நேற்றைய தினம் யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பில் இருந்து வந்திருந்த குற்றவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி எச். சந்திரதாஸா இது தொடர்பான மேலதிக தகவல்களை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை, யாழ். மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளரை இவ் வழக்கு சம்பந்தமான 17 காசோலைகளையும் சி.ஐ.டி. யினரிடம் கையளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இவ்வழக்கு விசாரணையை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். (உ-16)

# சுங்கத் திணைக்களம் நவீனத்துவம் பெறவேண்டும்

## தொ.ச. முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

சுங்கத்திணைக்களம் தற்காலத் தேவைக்கு ஏற்றதாக நவீனமயப்படுத்தப்படவேண்டும்.ஆனால் அரசியல் மயப்படுத்தப்படக்கூடாது என சுங்கப்பகுதி கூட்டுத் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்னணியின் தலைவர் வி. முனுவாங்கொட கருத்து தெரிவிக்கையில்,

அதிகாரசபைகளாக மாற்றப்பட்டுள்ள சகல நிறுவனங்களும் முற்று முழுதாக அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏற்பட்ட மோசடி மற்று ஊழல் நடவடிக்கைகள் காரணமாக பெருமளவு நிறுவனங்கள் மூடப்படும் அல்லது தனியார் மயப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இறை வரித்திணைக்களத்தையும் காலால் திணைக்களத்தையும் இணைத்து அதிகார சபை ஒன்றை உருவாக்குவதன் மூலம் அரசாங்கம் தனது பொறுப்பை கைவிட முயற்சி செய்து வருகின்றது என்றார். (தி)

# நிதிச் சட்டத்துக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மனுதள்ளுபடி

(கொழும்பு)

நிதிச் சட்டம்தேசிய வருமான விசேட விதிமுறைகள் சட்டம் ஆகியன அரசியல் யாப்பு விதிமுறைகளுக்கு மாறாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மாற்றுக்கொள்ளை மத்திய நிலையம் சார்பில் றொசான் எதிர் வீரசிங்க உட்பட மூவர் தாக்கல் செய்துள்ள இம் மனுவை சட்டமா அதிபர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்தார்.

மேற்படி கூட்டங்கள் கடந்த டிசம்பர் மாதம் 17ஆம்திகதி சபாநாயகரால் உறுதிப்படுத்தப்பட்டு, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களாக நிறைவேற்றப் பட்டபோதிலும் இவை அரசியல் அமைப்புக்கும் முரணானது என மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஹெத்தயாப்ப, நிஹால் ஜெயசிங்க ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் இம் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதி மன்றம் இதனை தள்ளுபடி செய்துள்ளது. (தி)

## அம்பாறை மாவட்ட

# வேலையற்ற பட்டதாரிகள் நேற்று மறியல் போராட்டம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்று கல்முனை மாவட்டச்செயலகத்துக்கு முன்னாள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7 மணி முதல் 10 மணி வரை செயலகத்தின் பிரதான வாயிற்கதவை அடைத்து இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக செயலகத்தின் பணிகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன.

1998ஆம் ஆண்டு முதல் 2002ஆம ஆண்டு வரையிலான காலத்தில் பட்டம் பெற்ற சுமார் 250பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கக் கோரியே இப்போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் பிரதமர், கல்வி அமைச்சர்,வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கான மகஜர்களை கல்முனை பிரதேச செயலரிடம் கையளித்தனர்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டப் பட்டதாரிகளும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது தெரிந்ததே. (தி)

# சுயவிருப்பில் ஓய்வு பெறுவோர்க்கு சேவைக்காலக் கொடுப்பனவு

## அரசாங்கம் ஆராய்வு

(கொழும்பு)


சேவைக்காலம் பூர்தியடையும் முன்னர் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற விரும்பும் அரசாங்கம் மற்றும் தனியார்த்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சேவைக் காலக் கொடுப்பனவுகளை வழங்குவது குறித்து அரசாங்கம கவனம் செலுத்தி வருகிறது.

இது தொடர்பான ஆரம்பக் கட்டப பேச்சுவார்த்தைகள் முடிவுற்றுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்

இதனை அமுல்படுத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே எடுக்கப்படும்.

இது தொடர்பாக தொழிற் சங்கங்களுடன் விரைவில் பேச்சு வார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாகவும் அமைசசர் மேலும தெரிவித்துள்ளார். (தி)

## இவர்களை அடைத்தால் போதுமா இவர்கள் தந்த கலாசாரத்தை அழிக்கவேண்டாமா....?




# செய்தித் துளிகள்

### வர்த்தகர்களுக்கு நீதிவான் எச்சரிக்கை

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள மானிப்பாய், சுதுமலைப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பிஸ்கட் பைக்கற்,கணடோஸ் மற்றும் இனிப்புவகைகளை விற்பனை செய்த வர்த்தகர்களை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மல்லாகம் நீதி மன்றத்தில் கடந்த வாரம் ஆஜர்படுத்தினார்கள்.

இவர்களை கடுமையாக எச்சரித்த நீதிவான் திருமதி ச.இளங்கோவன் தலா 3ஆயிரம் ரூபாவை குற்றப்பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.இனிமேல் தவறு கண்டு பிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுககப்படும் என எச்சரித்து விடுதலை செய்தார் . (தி-252)

### அபிவிருத்திப் பணிகள்

(கல்வயல்)

தென்மராட்சி கிழக்கு விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் ஜீ.ரீ.சற்றின் நிதியுதவியுடன் பல அபிவிருத்திப்பணிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம், ஆகியவற்றின் முயற்சியுடனும் ஜீ.ரீ.சற்றின் நிதி உதவியுடனும் புதிய வகுப்பறை, கணனி அறை, நூலகம் ஆகியவற்றிற்கான மூன்று கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுங்கியுள்ள சுமார் ஒரு இலட்சம் ரூபாவைக் கொண்டு பாடசாலை திறந்த வெளியரங்கிற்கு சீற்பொருத்துதல் உள்ளிட்ட மற்றும் பல திருத்த வேலைகளும் செய்யப்பட்டுள்ளன. (உ-111)

### கண்டியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேயிலைத் தோட்டங்களை அரசு தனியார் மயப்படுத்தும் திட்டங்களுக்கு எதிர்ப்புத்தெரிவித்து கடந்த திங்களன்று கண்டியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

தோட்டத்தொழிலாளர்கள் உட்பட பெருமளவிலான அதிகாரிகளும இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரச பெருந்தோட்ட யாக்கத்திற்கும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திக்கும் சொந்தமான தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதாகத் தெரிவித்து அதனைஅரசு தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. (தி)

### மூடி இல்லாத தண்ணீர் தொட்டி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொதுச்சந்தைக்கு முன்பாகவுள்ள பெரிய தண்ணீர்த்தொட்டியில் குப்பை கூழங்கள், அழுக்குகள், மீன் தலைகள் கிடப்பதால் துர்நாற்றம் வீசுகின்றது. இந்தத் தண்ணீர்த்தொட்டிக்கு மூடி இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (பி)

### குடிநீர், மலசலகூட வசதியில்லை

(கந்தரோடை)

சுன்னாகம் ஸ்ரோசன் முகாமில் வசிக்கும் மக்கள் குடி நீர், மலசல கூட வசதிகள் இன்றி பெரும் அவதிப படுகின்றனர்.

இம்முகாமில் இருபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனினும் இவர்களுக்கு ஒரு மலசலகூடமே பயன்படுத்த கூடிய நிலையில் உள்ளது. இதனால் நோய் பரவக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட தரப்பினர் இது வரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்க வில்லை என்று கூறப்படுகின்றது. (பி-103)

### ஐவரின் அங்கத்துவம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தென் மாகாண சபை உறுப்பினர்கள் 5 பேரின் அங்கத்துவம் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று கூடிய கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம எடுக்கப்பட்டது.

கட்சியின் அனுமதி இன்றி கடந்த ஏப்ரல் மாதம் இவ் 5 உறுப்பினர்களும் கட்சி நடவடிக்கைகளுக்காக இந்தியா சென்றது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர்களது அங்கத்துவப் பதவி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (தி)

### கட்டாக்காலிகளால் விவசாயிகள் கவலை

(கந்தரோடை)

மல்லாகம் கல்லாரைப்பகுதியில் கால்நடைகளால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. கட்டாக் காலிகளாகத்திரியும் கால்நடைகள் பயிர்களுக்கு சேதம் விளைவித்து வருகின்றன என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.(பி-103)

### சமாதான கட்டுரைப்போட்டி

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை வலியுறுத்தும வகையில் பாடசாலை மட்டத்தில் கட்டுரைப் போட்டிகளை நடத்த கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படவுள்ள இப்போட்டியின் விண்ணப்ப முடிவுத் தினம் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

### மின் விநியோகம்

(வேலணை)

நீண்ட காலத்திற்குப்பின்னர் வேலணை ஆஸ்பத்திரி வீதியிலிருந்து செட்டிப்புலம் பகுதிக்கான மின்சார விநியோகம் இலங்கை மின்சார சபை வேலணை பிரிவினரால் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் , மின்சாரம் வழங் கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-47)

### விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசியகல்வி நிறுவகத்தால் 2001/2006ஆம் கல்வி ஆண்டிற்கான கல்வி மாணிப்பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியும் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அல்லது தேசிய கல்வியற் கல்லூரி அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆரம்ப ஆசிரியர் பயிற்சியை பெற்றிருக்கும் விண்ணப்பதாரி , விண்ணப்ப முடிவுத்திகதியன்று 50 வயதிற்குட்பட்டவரான 3 ஆண்டு சேவையைப் பூர்த்திசெய்த பயிற்சி பெற்ற ஆசிரியர் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் கொழும்பு மகரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியாகும். (உ-18)

### நூல் நிலையம் திறப்பு

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்திற்கான புதிய நூல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. துறையூர் பகுதி மககளின் நீண்ட நாள் குறையொன்று தீர்ந்து விட்டதுடன், மேற்படி நூல் நிலையத்தில் இரவல் கொடுக்கும் பகுதியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-47)

### மாணவர்கள் மாவீராமயானத்தில் சிரமதானம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட மடு வலயப் பாடசாலை மாணவர்கள் கடந்த திங்களன்று மன்னார் ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர்.

மடுவலயம் ஆண்டான் குளம் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட 170 மாணவர்கள் இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெற்ற இச் சிரமதானப் பணிகளை மடுவலயப் பாடசாலை மாணவர்கள் பலரும் இணைந்து சூழற்சி முறையில் மேற்கொண்டனர். (உ-

### சத்துணவு மா வழங்கல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிமாணவர்களுக்கான சத்துணவு மா வழங்கும் ஆரம்பகட்ட நிகழ்வு இன்று நெடுந்தீவு மேற்கு மங்கயற்கரசி வித்தியாலயத்தில், வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். சத்துணவுமா வழங்கும் இச் செயற்பாடு மாதத்தில் 2 தடவைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-126)

# இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படும் விடயத்தில் ஆஸி. தெளிவாக உள்ளது

## தூதரக அரசியல் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும், வடக்கு-கிழக்கில் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு வரவேண்டும் என்பதிலும் அவுஸ்திரேலியா தெளிவாக இருக்கின்றது என அவுஸ்திரேலிய தூதரக அரசியல் செயலாளர் பில்னன்கவேஸ் கூறியுள்ளார்.

காத்தான்குடி சமாதானச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காத்தான்குடி சமாதான செயலக குழுவுடனான சந்திப்பின் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு மேலும் அரசியல் செயலாளர் கூறுகையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றி உதவ அவுஸ்திரேலிய அரசாங்கம் தயாராக உள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக முஸ்லிம் மக்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அவுஸ்திரேலியா நன்கு அறியும் என்றார்.

இந்தச் சந்திப்பின்போது காத்தான்குடி சமாதானச் செயலக இணைப்பாளர், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (உ-8)

# 12,13ஆம் திகதிகளில் யாழில் புற்றுநோய் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

மகரகம புற்றுநோய் மருத்துவ நிபுணர் திருமதி கலைவாணி உக்கிரப்பெருவழுதிப்பிள்ளையினால் நடத்தப்படும் புற்றுநோய் மருத்துவ முகாம் எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, மேற்படி மருத்துவ முகாம் வழமையில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் மாதத்தில் இரு தடவைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் அது அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்துச் செய்வதில் நோயாளர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக இடத்தை மாற்றுமாறு இவர்கள் கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

# நல்லூர் உற்சவம் சிறப்புற அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

## யாழ். மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தைச் சுற்றியுள்ள பிரதான சந்திகளிலும், ஆலயத்துக்கு மிக அருகாமையிலும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் வீதித் தடைகள் ஊடாக, திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் எவரும் வாகனங்களைக் கொண்டு செல்லாது மாற்றுவழிகளைப் பயன்படுத்துமாறு யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவம் அமைதியாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (இ)

# ஆலய விக்கிரகத் திருட்டுக்கள் தீவகத்தில் என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

(வேலணை)

தீவுப்பகுதி ஆலயங்களில் உள்ள பெறுமதி வாய்ந்த விக்கிரகங்கள் திருடப்படும் சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளன.

இந்த வகையில் கடந்த சில தினங்களிற்கு முன்னர் மண்கும்பான் கறுப்பாச்சி அம்பாள் ஆலயத்தின் செப்பினாலான மூல விக்கிரகம் திருடப் போயுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி ஒன்றரை லட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். நகரில் இருந்து தீவகம் நோக்கிச் செல்பவர்கள் மட்டுமே அல்லைப்பிட்டி இராணுவ சோதனைச் சாவடியில் சோதனை செய்யப்படுகின்றனர்.

தீவகத்திலிருந்து யாழ். நோக்கிச் செல்வோர் கடற்படையினால் இவ்விதம் சோதனை செய்யப்படுவதில்லை. இதனைப் பயன்படுத்தியே தீவகத்தில் இருந்து பெறுமதியான பொருட்கள் கடத்திச் செல்லப்படுகின்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-47)

# இந்து கலாசார அமைச்சர் புளியங்கூடலுக்கு விஜயம்

## மக்கள் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்தார்

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் கிராமத்திற்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் நேரடியாக விஜயம் செய்து கிராம மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சருக்கு புளியங்கூடல் இந்தன் பிள்ளையார் ஆலயத்தில் வரவேற்பளிக்கப்பட்டது.

அமைச்சர் குறிப்பிட்ட கிராமத்தில் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு தேவையான சீமெந்துப் பைக்கற்றுக்களையும் கூரைத் தகடுகளையும் வழங்குவதாகவும், வீட்டு வசதி அற்றவர்களுக்கு பத்து வீட்டுத்திட்டத்தினை அமைத்துத் தருவதாகவும், மின்சாரம் வழங்கல், வீதிகள் திருத்தம் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் மக்களிடம் உறுதியளித்தார்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் சமாதான நீதவான் கு.கங்கைவேணியனும் கலந்துகொண்டார். (பி-75)

# நடமாடும் வங்கிச்சேவை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையின் நடமாடும் சேவை இன்று யா/அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி வங்கிச்சேவையின் போது சிறுவர்களுக்கான சிசுஉதான மாணவர்களுக்கான மலர்ச்சிக் கணக்குகள் போன்றவற்றைப் புதிதாக ஆரம்பிக்க முடியும்.

அத்துடன், ஏற்கனவே கணக்கு வைத்திருப்பவர்கள் இச்சேவையின் போது பணத்தை வைப்பிலிட முடியும். இவர்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்குப் பரிசில்களும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன. (உ-75)



அகில இலங்கை சைவப் புலவர் சங்க பட்டமளிப்பு விழாவில் வைத்து இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நாவலர் மகாவித்தியாலயத்திற்கு கணனி ஒன்றை அதிபர் ந.சிவராசா விடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

படம்: செ.அருளம்பலா

# வங்கிக் கிளைகளிலும் கட்டணம் செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரெலிக்கொம் தொலைபேசிப் பாவனையாளர்கள் தங்கள் மாதாந்த தொலைபேசிக் கட்டணத்தை மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, இலங்கை வங்கிக் கிளைகளிலும்செலுத்தலாம் என்று ரெலிக்கொம் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொலைபேசிப் பாவனையாளர்கள் தங்கள் தொலைபேசிக் கட்டணங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள ரெலிக்கொம் காரியாலையத்தில் செலுத்துவதற்கு நீண்ட நேரம் வரிசையில் காத்து நிற்பதைத் தவிர்க்குமுகமாகவே வங்கிகளிலும் பணம் செலுத்தக்கூடிய வசதிகளை ரெலிக்கொம் நிறுவனம் செய்துள்ளது. வங்கிகளில் பணம் செலுத்தும் தொலைபேசிப் பாவனையாளர்களின் பணம் குறித்த திகதிகளில் வந்து சேராவிட்டாலும், அவர்களது தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட மாட்டாது என்றும், வடமராட்சித் தொலைபேசிப் பாவனையாளர் கள் தமது தொலைபேசிக் கட்டணங்களை மாலு சந்தியிலுள்ள ரெலிக்கொம் காரியாலயத்தில் செலுத்தலாம் என்றும் அந்த உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# 'நாமும் புற்றுநோயும்' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகரகம புற்றுநோய் வைத்திய நிபுணர் திருமதி கலைவாணி உக்கிரப் பெருவழுதிப்பிள்ளையின் 'நாமும் புற்றுநோயும்' என்னும் தலைப்பிலான கருத்துரை எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 3மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் எவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 19 முன்பள்ளிகள் இணைந்து நடாத்திய முன்பள்ளிகளின் கண்காட்சி கடந்த 20ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு வருகைதந்த மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன், பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி மற்றும் பிராந்திய மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் இராஜேந்திரா ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# காவலரணுக்குள் புகுந்தவர்கள் இளைஞர்களிடம் ஒப்படைப்பு

(கொழும்புத்துறை)

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்தோர் தம்மை வழிமறித்த, கலாசாரத்தைப் பேணும் இளைஞரைத் தாக்கிவிட்டு இராணுவ முகாமிற்குள் புகுந்தனர். பின்னர் படையினரால் பிடிக்கப்பட்டு கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

அரியாலை முள்ளிப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மண் ஏற்றிவந்த இருவரை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் வழிமறித்த போது அவர்களைத் தாக்கிவிட்டு அண்மையிலுள்ள காவலரணுக்குள் அவர்கள் புகுந்து விட்டனர். படையினர் சாரதிகளை கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைக்க, அவர்கள் விசாரணைகளின் பின் மண்ஏற்றிவந்தவர்களை எச்சரித்து விடுதலை செய்தனர். (பி-51)

# கலந்துரையாடல்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரசாங்க வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே.குமாரவேல்பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார். (உ-252)



சுன்னாகம் மேற்கு ஜெயந்தினி ஞாபகார்த்த பாலர் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வின்போது முன்பள்ளி சிறார்கள் அணிவகுத்துச் செல்கின்றனர். படம்:த.கமலரூபன்

# ஏ-9 வீதி திருத்தப் பணி ஒக்டோபரில் பூர்த்தி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கண்டி வீதி இவ்வாண்டு ஒக்டோபர் மாதமளவில் திருத்தப்பட்டுவிடும் என நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் உபசேன சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஓமந்தையிலிருந்து முகமாலை வரையிலான பாதைத் திருத்த வேலைகள் ஓரளவு பூர்த்தியடைந்துள்ளன.

ஏ-9 பாதையை அண்டிய பகுதிகளில் உள்ள நிலக்கண்ணிவெடிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இப்பாதையை அண்டிய ஏனைய பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டதும் இத்திருத்த வேலைகள் பூர்த்தியடையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# மிதிவெடி அபாய கல்வித் திட்டம்

(தனங்கிளப்பு)

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் சர்வோதயம் நடத்தும் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு பழைய பொலிஸ்ரேசன் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள வீடொன்றில் நடைபெறவுள்ளது. (உ-37)

*கனை கொடிது யாழ் கோடுசெவ்விது ஆங்கன்ன*
*வினைபடு பாலால் கொளல்*
*-குறள்*

வலம்புரி

## இனவாதத்திற்கு தூபம் இடல்

வடக்குக் கிழக்கு இணைந்த இடைக்கால சபையை எதிர்த்து தேசிய பிக்குமார் சம்மேளனம் துண்டுப் பிரசுரங்களை விநியோகத்து வருகிறது.சமாதான முயற்சியை எதிர்க்கும் பிக்குமார்கள் தமது சமாதான எதிர்பபு நடவடிக்கைகளுக்குப் பௌத்த விகாரைகளைப் பயன்படுத்தி அதன் மூலமாக இடைக்கால சபைக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருவது நாட்டுக்குப் பெரும் கேடாகும். மனிதர்களை மனிதர்களாக வாழ வைப்பதற்காக அமைக்கப் பட்டவையே ஆலயங்களும், விகாரைகளும் ஆகும். இவற்றின் முக்கிய பணி, இனங்களிடையே ஒற்றுமை, சமாதானம் என்பவற்றை ஏற்படுத்தி, நாடடில் அமைதியையும், சாந்தியையும் நிலவச் செய்வதாகும்.

ஆனால் இவற்றுக்கு மாறாக பௌத்த விகாரைகள் நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்தும் நிறுவனங்களாக இயக்கப்படுகின்றன. கடந்த காலங்களிலும், நிகழ்காலங்களிலும் இனவாதத்தீயைப் பரப்பும் அமைப்புக்களாகப் பௌத்த விகாரைகளும் இனவாதத்தைத் தூண்டும், இயக்கிகளாக பௌத்த பிக்குகளும் செயற்படுகின்றனர். அதன் ஒரு கட்டமாகவே இடைக்கால சபையை எதிர்த்து துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் இயக்கத்தை தேசிய பிக்குமார் சங்கம் ஆரம்பித்துள்ளது.அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு இயக்கத்தை பௌத்த விகாரைகள் மூலம் நடைமுறைப்படுத்த முனைவது மிகப் பெரும் பயங்கரவாதமாகும்.

எனினும், இந்நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் இருக்கும் அரசாங்கத்தின் போக்கு சமாதானத்தின் பால், அரசுகாட்டுகின்ற அக்கறையீனத்தையே வெளிப்படுத்தும்.

இருபது வருடகால யுத்தத்திற்கு சமாதான வழியில் முற்றுப் புள்ளி வைக்க சர்வ உலகமும் முனைப்புடன் செயற்படும் போது, பிற உயிர்களுக்கு இம்சை செய்யாதே என்ற கௌதம புத்தரின் போதனையை அமுல்ப்படுத்த வேண்டிய காவிதரித்தவர்கள், அதற்கு மாறாக இனப் படுகொலைக்குத் தூபம் இடுகிறார்கள் எனின் இந் நடவடிக்கையைக் கண்டிக்க சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்.

சமாதான முயற்சியின் ஓர் அம்சமாகவிருக்கும் இடைக்கால நிர்வாக சபையை எதிர்க்கும் போராட்டங்களை பௌத்த பிக்குகள் ஆரம்பித்து வைக்க அதன் வழியில் ஜே.வி.பியின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய என இனவாதக் கட்சிகள் ஒன்று திரண்டு சமாதான முயற்சியை எதிர்க்கும் போது அதனை அடியோடு கட்டுப் படுத்தும் நடவடிக்கையை அரசு முனைப்புடன் செய்தால் மட்டுமே சமாதானத்தின் உயிர்ப்பு நிஜமாக முடியும்.

இதுவிடயத்தில் அரசாங்கம் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிக்குமாயின் சமாதானம் என்பது சாத்தியமற்ற தொன்றாகிவிடும்.

# யாழ்.குடாநாட்டுக்கு வந்து செல்வோர் மீதான கண்காணிப்பைப் படைத்தரப்பு தீவிரப்படுத்தியுள்ளது

## இணையத்தின் மாதாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இராணுவம் தனது சோதனைச் சாவடிகளைத் தொடர்ந்தும் பலப்படுத்திய நிலையிலேயே உள்ளது. குடாநாட்டுக்கான பிரதான நுழைவாயிலாகக் கருதப்படுகின்ற ஓமந்தையில் பாதுகாப்புப் படையினர் தமது கண்காணிப்பைப் பலப்படுத்தியுள்ளதுடன், குடா நாட்டுக்கு யார், யாரெல்லாம் வருகின்றார் என்பதை மிகவும நுணுக்கமாகப் பார்த்துக் கொள்கின்றது.

தனியார் துறையினர் தமது வியாபார நடவடிக்கைகளைப் பலப்படுத்தி முன்னேறி வரும் அதே சமயம், குடாநாட்டுச செல்வம் யாவும தெற்கிற்குக் கொண்டு செல்லப் படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதே சமயம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் எந்த வித திட்டங்களும் செயலூக்கம் பெறவில்லை. மக்கள் மத்தியில் வாழ்க்கை பற்றிய அச்ச நிலையும் நிச்சயமற்ற தன்மையுமே நிலவுகின்றது.

இவ்வாறு யாழ். மாவடட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள ஜூன்மாத நிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிபபிட்டுள்ளதாவது,

இலங்கை அரசுக்கும் -தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 16மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவுமே மேற்கிளமபவில்லை.சமாதானப் பேச்சுவாாத்தையில் இருந்து புலிகள் விலகிக் கொண்டதும், பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு நடவடிக் கைகளைப் பலப்படுத்தியுள்ளதும் சமாதானத்தில் இருந்த நம்பிக் கையைக் குறையச் செய்துள்ளது.

### மீள்குடியமர்வு

யாழ்.அரச செயலகத் தகவல் பிரகாரம் நிக்கோட் நிதியுதவியுடன் 23கிராமங்களில் மீள்குடியமர்வுத் திட்டத்தினை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனத்தின் நிகழ்ச்சிப்படி உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 26இலட்சத்து 95ஆயிரம் ரூபா செலவில் 53 நிரந்தர வீடுகளும், 5இலட்சத்து 42ஆயிரம் ரூபா செலவில் 34மலசலகூடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன. அத்துடன் யு.என்.எச்.சீ.ஆர் தென்மராட்சி பிரதேசத்தில் 200தற்காலிக வீடுகளையும் அமைக்கவுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் காரணமாக 2003ஜூன் மாதம் வரை 44ஆயிரத்து 183குடும்பங்களைச் சேர்ந்த ஒருலட்சத்து 64ஆயிரத்து 738பேர் யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இதேசமயம், மீளக்குடியமர்ந்த குடும்பங்களுள் 4ஆயிரத்து 225குடும்பங்களுக்கு மட்டுமே 25ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் அரசயந்திரம் துரிதமாகச் செயல்படவேண்டியது அவசியமாகும். இக்கொடுப்பனவை வழங்குவதில் எத்தகைய தாமதமும் காட்டப்படுதல் நல்லதல்ல.

### கண்ணிவெடி

யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் கணிசமான முனனேற்றம் காணப்பட்டுள்ளது. பல கிராம சேவகர் பிரிவுகள் கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட நிலையில் உரிய தரப்பினரிடம் அதிகார பூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடங்கள் பற்றிய வரைபடங்களை பாதுகாப்புப்படையினரும் விடுதலைப் புலிகள் அமைப்பும் யாழ்.மாவட்ட மிதிவெடிகள் அகற்றும் செயல்பாட்டு அலுவலகத்தில் இன்னமும் கையளிக்காமையினால், மிதி வெடி அகற்றும் பணிகள் மிகவும் தாமதமாகவே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதேவேளை, பாடசாலை அமைவிடங்கள், விவசாய நிலங்கள், ஆஸ்பத்திரிகள் மற்றும் உத்தேச மீள்குடியமர்வுப் பகுதிகள் முன்னுரிமை அடிப்படையில செய்யப்படவேண்டும் என இனங்காணப்பட்டுள்ளன.

### சுகாதாரம்

சுகாதாரப பிரிவில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டு வருகின்றது. இருப்பினும், மருத்துவ ஊழியர்களுக்கு தட்டுப்பாடு தொடர்ந்தும் இருந்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. அத்துடன் ஏ-9பாதை திறக்கப்பட்டுள்ள போதிலும் குடா நாட்டுக்கான மருந்து விநியோகத்தில் தாமதம் நிலவி வருகின்றது. தீவகத்திலுள்ள எழுவை தீவில் வதியும் மக்களுக்கு சுகாதார, மருத்துவ நலன்களும், வாய்ப்புகளும கிடைப்பதில் கஸ்டங்கள் எதிர் நோக்கப்பட்டு வருகின்றன. எழுவைதீவு மக்கள் தமது சுகாதார, மருத்துவ தேவைகளைப் பெறுவதற்கு பல்வேறு விதமான கஸ்டங்களுக்கு மத்தியில படகுகள் மூலம் ஊர்காவற்றுறைக்குச் செல்லவேண்டியுள்ளது.

யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

### கல்வி

யாழ்ப்பாண மக்களின் செல்வமாக விளங்குகின்ற கல்வியின் தரம் வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளது. க.பொ.த சாதாரணமற்றும் உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் வீழ்ச்சி நிலையிலே காணப்பட்டுள்ளது. யாழப்பாணக் கல்வியின் நிலைப்பாடு மேம்படுத்தப்படவேண்டும் அத்துடன், இலவச பாடநூல்கள் விநியோகம் இன்னமும் முழுமை பெறவில்லை. அதன்பொருட்டு யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் தமது கல்வியை முழுமையாகப் பெறக்கூடிய வாய்ப்புகள் தடுக்கப்பட்டுள்ளன.

### சட்டமும் ஒழுங்கும்

கொள்ளை, திருட்டு, மற்றும் சமூகவிரோத செயற்பாடுகள் எல்லா இடங்களிலும் அதிகரித்த நிலையிலே காணப்படுகின்றது. கொள்ளைக் கும்பல்களும், திருட்டுக் கோஷ்டிகளும் சட்டம் ஒழுங்கை மதியாது தமது இஷ்டம் போலச் செயற்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் வேலைவாய்ப்பின்மை மற்றும் வருமானமின்மை போன்றவை இத்தகைய நிலைக்குக் காரணம் என இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### விவசாயம்

விவசாய உள்ளீடுகள் யாழ். மாவட்டத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற போதிலும் கூட, அவற்றின் விலைகள் உயர்வாகவுள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகள் தமது உற்பத்திகளை அதிகரித்துள்ள போதிலும் கூட மிகக்குறைந்தளவு இலாபத்தையே பெறுகின்றனர். அத்துடன், விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

### சூழல் பாதுகாப்பு

பாதுகாப்புக் காரணங்களுக்காக பாதுகாப்புப் படையினரால் கண்டபடி தறிக்கப்பட்ட பனை தென்னை மரங்களுக்கு ஈடுசெய்யும் வகையில் திட்டமிட்ட முறையில் மரம் நடுகைத் திட்டங்கள் எதுவும் அமுல் செய்யபபடவில்லை. இது விடயத்தில் அதிகாரத்தினர் பாராபட்சமாகவேயுள்ளனர்.

### பாதுகாப்பு

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் கூட்டுறவுச் சமாசத்தின் ஐஸ் தொழிலகத்தினை அமைக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அனுமதியளித்திருந்த போதிலும் கூட பாதுகாப்புப்படையினா அதனை அமைக்க அனுமதிக்கவில்லை.

பாதுகாப்பு படையினர் சோதனைச சாவடிகளை பல புதிய இடங்களில் அமைத்துள்ளனர். இதன் காரணமாக இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

ஈ.பீ.ஆர்.எல்எவ் வரதர் அணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் றொபேட் சுபத்திரன் (வயது 47) இனந்தெரியாதவர்களால் 14.06.2003ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பொங்குதமிழ்

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் பெங்குதமிழ் நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பல தரப்பட்ட மக்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். என்று அந்நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-16)

# கிழக்கு மாகாண சிங்களக் கிராமங்களில் துரித அபிவிருத்தி

## ஹக்கீம் 90இலட்சம் ஒதுக்கு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களின் உடனடி அபிவிருததிக்கென கிழக்கு மாகாண அபிவிருத்தி, கப்பல்துறை அமைச்சர் ரவூப்ஹக்கீம் 90இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த உள்ளூராட்சித் தலைவர்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் சந்தித்த பின்பே இந் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் சிங்களக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு கிழக்கு அபிவிருத்தி அமைச்சர் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என அப்பிரதேச உள்ளூராட்சித் தலைவர்கள் அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)



### சாயி அருளமுதம்

மேகங்கள் வானில் திரளும் போது மின்னல் அவற்றுக்கு ஒளி பாய்கின்றது அது போலவே ஞானமானது கல்விக்கு ஒளியுட்ட வேண்டும்.''சாயி''யின் சொல் உண்மையின் பாதையாகும் மிகச் சிறிய அணுவிலும் சிறியது பெரியவற்றிலெல்லாம் பெரியது. சகலவற்றிற்கும் சாட்சியாக விளங்குவது ஆத்மாவே பிரம்மம், பிரம்மமே ஆத்மாவகும்

நாளாந்த நற்சிந்தனை

# இலங்கையில் மூன்றிலொரு குழந்தைக்கே தாய்ப்பால் ஊட்டப்படுகின்றது

## ஆய்வு அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மூன்று குழந்தைகளுக்கு ஒன்று என்ற அடிப்படையிலேயே தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்பட்டு வருவதாக உலக சுகாதார அமையமும். ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியமும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் இன்று வியாழக்கிழமை வரை அனுஷ்டிக்கப்பட்டு வரும் உலக தாய்ப்பால் ஊட்டும் வாரத்தையொட்டி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்தே இவ் உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

குறைந்தது 4 மாதங்களாவது தாய்ப்பால் ஊட்டப்படும் குழந்தைகள் தொடர்பாக இவ்வாய்வு நடத்தப்பட்டது.

இதன் போது 3குழந்தைகளுக்கு ஒரு குழந்தையே அவ்வாறு 4மாதங்கள் தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது.

ஏனையோர் தாய்ப்பாலை தவிர்ந்த ஏனைய மாற்று வழிகளை நாடிவருவதாக அவ்வாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஒரு குழந்தை பிறந்தது முதல் குறைந்தது 6மாதங்களாவது தாய்ப்பால் ஊட்டி வளர்க்கப்படுவது அவசியம் ஆனால், பெண்கள் தொழிலில் ஈடுபட்டு வருவது அதிகரித்து வருவதனாலும், சில ... நம்பிக்கைகள் காரணமாகவும் ... அனேகமாக சாத்தியமற்றுப் ... தாக அவ்வறிக்கையில் மே... குறிப்பிடப்பட்டுள்ளது

# ஜப்பானிய மாணவிகள் பிரதமருடன் உரையாடல்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள மூன்று ஜப்பானிய மாணவிகள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தைப் பார் வையிட்டதுடன், அவர்களைப் பாராளுமன்ற சபாநாயகர், வெளிவிவகார அமைச்சர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளனா.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள மேற்படி மூன்று மாணவிகளும் கடந்த திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர வழிவகை செய்ய வேண்டும்

## மனிதநேய அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

**1983 ஆம் ஆண்டு ஜுலையில் இடம்பெற்ற இன வன்செயல்களின் போது உயிர் நீத்தவர்களை நினைவு கூரவும், எதிர் காலத்தில் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் அப்பாவி மக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் நிகழாமல் இருக்கவும் பிரார்த்தனைக் கூட்டங்களை நாடாத்துவதற்கு ஏதுவாக ஒவ்வொருவருடமும் ஜுலை 24-ம் திகதியை பொது வ்டுமுறை தினமாக அரசாங்கம் பிரகடனம் செய்ய வேண்டும்.**

இவ்வாறு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு நேற்று அனுப்பி வைத்த ''கறுப்பு ஜூலை 1983 மீண்டும் வேண்டாம்'' என்னும் தலைப்பிலான மகஜரில் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன்,இணைச் செயலாளர் எம்.தர்மரத்தினம் ஆகியோரால் கையொப்பமிட்டு அனுப்பி வைத் துள்ள அம் மகஜரில் மேலும் சுட்டிக் காட்டப்பட் டுள்ளதாவது.

1983 கறுப்பு ஜூலை சம்பவம் இடம் பெற்று இருபது வருடங்கள் பூர்த்தியான நிலையில் அப்பாவி மக்கள் மீது கட்ட விழ்த்துவிடப்பட்ட இப்பாரிய குற்றத்தினை நாம் மிகவும் வன்மையாகக் கண்டித்து நிற்கின்றோம். இது விடயத்தில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உண்மை அறியும் ஆணைக்குழுவை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

இவ்வருடம் வெளியிடப்பட்ட மேற்படி ஆணைக்குழுவின் அறிக் கையில் பரிந்துரைக்கப் பட்ட சிபார்சுகள் அமுல் செய்யப்பட வேண்டியதுடன் அந்த இனக்கல வரத்தில் மனித உரிமை மீறல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நஷ்ட ஈட்டினை மிகவிரை வில் வழங்கவும் வேண்டும்.

இதற்கு வழிவகுக்கும் வகை யில், 'சர்வதேச சமூகத்தின் உதவியுடன் 'ஜனாதிபதி நிதியத் தில் விஷேட நிதி உரு வாக்கப்படல் வேண்டும். மேலும் கடந்த காலங்களில் வெளியிடப் பட்ட பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் போன்று தூசி பிடிக் கும் வகையில் வைக்கக்கூடாது. உடனடியாக அர்த்தம் பொதிந்த செயற்பாடு வேண்டப்படுகிறது.

மேலும் 1983 ஜூலை 25 முதல் 27 வரையான காலத்தில் மிகவும் பாதுகாப்பான நிலையில் இருந்த வெலிக்கடைச் சிறைக் கூடத்தில் தமிழ்க் கைதிகள் மோசமான முறையில் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்த வடுக்கள் இன்றுமே அழிக்கப்பட முடியாத வைகளாகவுள்ளன.

மேற்படி சம்பவங்கள் போன்று இனிமேல் எமது அழகிய நாட்டில் இடம் பெறக் கூடாதென்பதே பிரார்த்தனையாகும். ஆயினும் சமாதானத்துக்கான போர் என்ற வகையில் பலவிதமான அட்டுழி யங்கள் இடம் பெற்றுவிட்டன என்பதையும்வேதனையுடன் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாகவுள் ளோம்.

எனவே, உண்மைக்கும் இணக் கப்பாட்டுக்குமான நிரந்தர ஆணைக்குழு ஒன்று நியமிக்கப் படுவதன் மூலமும், அதன் அறி க்கைகள் காலத்துக்குக்காலம் வெ்ளியிடப்படுவதன் மூலமும் இனங்களுக்கிடையிலான முரண் பாடுகளையும் அபிப்பிராய பேதங் களையும் இல்லாமல் செய்ய முடியும் என எமது ஒன்றியம் கருதுகின்றது.

மேலும தற்போது அமுலிலுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் எவ்வ கையிலேனும் அரச பயங்கரவா தம் அலலது கலகக் குழுக்களால் மீறப்படுகின்ற நிலை உருவாக் கப்படுமாயின் அதன் தாக்கங்கள் முழுத் தீவுக்கும் ஆபத்தாக அமையும் என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்கு முன்வைக்க விரும்புகின்றோம் என அம் மகஜரில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் ரணில் விக்கிரமசிங்கா அரசியல் தலைவர் கள் மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(உ-10)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இன்று வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ''சிங்களக் குடியேற்ற வாதமும் ஈழத்தின் மீதான பொருளாதாரப் பாதிப்பு களும்'' என்ற தலைப்பில் கருத்துரையினை யாழ் பல்கலைக கழக பொருளியல்துறை விரிவு ரையாளர் கலாநிதி வி.நித் தியானந்தம் நிகழ்த்தவுள்ளார்.(ந-3)

## காலச்சுவடு ஆசிரியருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்து வெளி யாகும் ''காலச்சுவடு'' சஞ்சிகையின ஆசிரியர் கண்ணன் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நாடக விரிவுரை மண்டபத்தில் எழுத்தாளார் அ.ஜேசுராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

கலை இலக்கிய ஆர்வலர்களை இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-3)

## உழவு இயந்திரம் தடம் புரண்டு மூவர் காயம்

(யாழ்ப்பா்ணம்)

உழவு இயந்திரம் தடம் புரண்டதில் அதில் சென்ற மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 9 மணியளவில் இருபாலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக் கொண்டு சென்ற பொழுதே அது தடம்புரண்டு விபத்துக் குள்ளானது. (த)

---

**தமிழர்...**

சேதமடைந்துள்ளது.

இத்தாக்குதலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

இதேவேளை தமிழர் புனர்வாழ் வுக் கழகமும் பிரித்தானிய மிதி வெடி அகற்றும் செயற்பாட்டுக் குழு வும் இணைந்து மட்டக்களப்பில் மிதி வெடிகளை அகற்றும் நடவடி க்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி அலுவலகம் மீது கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13-ம் திகதி யும் இனந்தெரியாதோரால் கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (இ)

## ஆசிய மருத்துவக் குழுவின் நடமாடும் சேவை நிறுத்தம்

### வவுனியா மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

(வவுனியா)

ஜப்பானிய அரசின் நிதியுதவி யுடன் வவுனியாவில் இடம்பெற்று வந்த ஆசிய மருத்துவச் சங்க வைத்தியக் குழுவினரின் நடமாடும் வைத்திய சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளது.

கடந்த 5மாதங்களாக இடம் பெற்றுவந்த மேற்படி நடமாடும் வைத்திய சேவை இடைநிறுத்தப் பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா மக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

மேற்படி நடமாடும் வைத்திய சேவையினால் கிராமப் பகுதி மக்கள் பெரும் பயனைப் பெற்று வந்துள்ளனர்.

இதேவேளை மேற்படி மருத்து க்குழுவின் சேவையை கிளிநொச் சியைத் தளமாக கொண்டு செய ற்படுவதற்கு திட்டமிடப்பட்டு ள்ளதாகக் கூறப்படுகின்றது.(த-13)

## பிறந்த நாள் கொண்டாடிய சிறுவன் விஷம் தீண்டி மரணம்

### கிளிநொச்சியில் பரிதாபம்

(கிளிநொச்சி)

விஷம் தீண்டியதால் இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளான் இச் சம்பவம் கிளிநொச்சி உதய நகரில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு இடம்பெற்றுள்ளது இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நாடராசா யதுர்சன் என்ற சிறுவனே உயிரி ழந்தவராவார்.

நேற்று முன்தினம் தனது இர ண்டவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் கொண்டாடிய பின்னர் பிறந்த தினத்திற்கென அமைக்கப் பட்டிருந்த பந்தலில் உறங்கி கொண்டிருந்த போதே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இத் துயரச் சம்பவம் இடம் பெற்றது. (ந-3)

## திருமறைக் கலாமன்றம்

## மாவட்ட மட்ட கிறிக்கெற் போட்டி

## யாம் மாவட்ட அணியிடம்

# நடமாடும் சேவை நிறுத்தம்

## வவுனியா மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

(வவுனியா)

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் வவுனியாவில் இடம்பெற்று வந்த ஆசிய மருத்துவச் சங்க வைத்தியக் குழுவினரின் நடமாடும் வைத்திய சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 5மாதங்களாக இடம் பெற்றுவந்த மேற்படி நடமாடும் வைத்திய சேவை இடைநிறுத்தப் பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா மக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

மேற்படி நடமாடும் வைத்திய சேவையினால் கிராமப் பகுதி மக்கள் பெரும் பயனைப் பெற்று வந்துள்ளனர்.

இதேவேளை மேற்படி மருத்துக்குழுவின் சேவையை கிளிநொச்சியைத் தளமாக கொண்டு செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.(த-13)

மேலும தற்போது அமுலிலுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் எவ்வரையாளர் கலாநிதி வி.நித்தியானந்தம் நிகழ்த்தவுள்ளார்.(ந-3)

# பிறந்த நாள் கொண்டாடிய சிறுவன் விஷம் தீண்டி மரணம்

## கிளிநொச்சியில் பரிதாபம்

(கிளிநொச்சி)

விஷம் தீண்டியதால் இரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான் இச் சம்பவம் கிளிநொச்சி உதய நகரில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு இடம்பெற்றுள்ளது இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நாடராசா யதுர்சன் என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் தனது இரண்டவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் கொண்டாடிய பின்னர் பிறந்த தினத்திற்கென அமைக்கப்பட்டிருந்த பந்தலில் உறங்கி கொண்டிருந்த போதே நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இத் துயரச் சம்பவம் இடம் பெற்றது. (ந-3)

### தமிழர்...

சேதமடைந்துள்ளது.

இத்தாக்குதலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் பிரித்தானிய மிதி வெடி அகற்றும் செயற்பாட்டுக் குழுவும் இணைந்து மட்டக்களப்பில் மிதி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி அலுவலகம் மீது கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13-ம் திகதியும் இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (இ)


# திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

## தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டி

எமது மன்றம் செப்ரெம்பர் மாதம் நடத்தவிருக்கின்ற நாட்டுக் கூத்து விழாவின் ஒரு அம்சமாகவும், பாரம்பரியக் கலைகளைப் பேணுகின்ற நடவடிக்கைகளின் ஒரு செயற்பாடாகவும் இப் போட்டி நடத்தப்படவுள்ளது.

### போட்டிக்கான பரிசுத் தொகை

1ம் பரிசு - 8,000 ரூபா
2ம் பரிசு - 6,000 ரூபா
3ம் பரிசு - 4,000 ரூபா

### போட்டி விதிகள்

1. நாட்டுக் கூத்துக்கள் ஒரு மணி நேரத்துக்குள் அமைந்திருக்க வேண்டும்.
2. பாரம்பரியமான பழைய நாட்டுக் கூத்துப் பிரதிகளை ஆற்றுகை செய்தலே விரும்பத்தக்கது. எனினும் புதிய கூத்துக்களை படைக்க விரும்புபவர்கள் மரபு வழிக் கூத்தின் கட்டமைப்புக்குள் நின்று படைக்கலாம்.
3. யாழ்.மாவட்டத்தில் உள்ள தனிநபர்களும் நிறுவனங்களும் மட்டுமே இப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
4. போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு கூத்துக்கும் தலா ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படும்.
5. போட்டிக்கு விண்ணப்பிப்போர் ஆற்றுகை செய்யும் நாட்டுக் கூத்துப் பிரதியை முன் கூட்டியே அனுப்புதல் வேண்டும்.
6. போட்டிக்கான இறுதி முடிவு நடுவர்களுடையதே.
7. திருமறைக்கலாமன்ற அங்கத்தவர்களோ அல்லது அவர்களால் நெறியாள்கை செய்யப்படும் படைப்புக்களோ இப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.
8. விண்ணப்ப முடிவுத் திகதி 18.08.2003 திங்கட்கிழமை.
9. போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாத முதல் வாரத்தில் நடைபெறும்.

*விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-* ''தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டி''
பொதுச் செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்,
238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6554)


## மாவட்ட மட்ட கிறிக்கெற் போட்டி

# யாழ் மாவட்ட அணியிடம் மன்னார் அணி தோற்றது.

(யாழ்ப்பாணம்)

தம்புள்ளவில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான யாழ்.மாவுட்ட மட்ட கிறிக்கெற் போட்டியில் யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 8 விக்கெற்றுக்களால் தோற்கடித்தது

நேற்று நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி 50 ஓவர்கள் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமார் 15 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்

பந்துவீச்சில் யாழ் மாவட்ட அணியைச் சேர்ந்த ச.அகிலன் 27 ஓட்டங்களுக்கு 4 விக் கெற்றுக்களையும் ப.லவேந்திரா 10 ஓட்டங்களுக்கு 3விக் கெற்றுக்களையும் உமாநாத் 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றையும் பிரகாஸ 5 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 2 விக்கெற்றுகளை மட்டும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை எட்டியது. இதில் ஏ.யசிந்தன் 11 ஓட்டங்களையும் உமாநாத் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களையும் லவேந்திரா ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றனர்

இதேவேளை நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த யாழ் மாவட்ட மற்றும் வவுனியா மாவட்ட அணிகளுக்கிடையிலான கிறிக்கெற் போட்டி நாளை வெள்ளிக் கிழமையும், யாழ் மாவட்ட மட்டக்களப்பு மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமையும் நடை பெறவுள்ளது. (த-3)

### மிதிவெடியில்...

சேர்ந்த எஸ்.சகாயநாயகம் (வயது 45) எஸ்.பரராஜசிங்கம்(வயது 57) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். (இ-7)

### எதிர்க் கட்சி...

மட்டுமே தவிர இதற்கு நேரம்,திகதி இன்னமும் ஒதுக்கப்படவில்லை என்பதால் இது சம்பந்தமாக நாம் பாராளுமன்றத்தில் விவாதிக்கலாம் என்று தெரிவித்து எதிர் கட்சியினர் பெரும் கூச்சல் இட்டனர்.

இதனையடுத்து சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார். (ந-3)

### புலிகளின்...

இந்நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இம் முகாம் குறித்த சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச்சு நடத்தவுள்ளனர். (இ)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.